


பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

க

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 9

அம்மான்
ஆண்டி
நக்கீரன்
வழிப்போக்கன்
தே. நாராயணன்
மா. குமாரசாமி
ஏ. பி. சனர்த்தனம்
தில்லை வில்லாளன்
விசு. திருநாவுக்கரசு

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
வைகாசித் திங்கள் 28-ம் நாள்

விலை அணு 5
10—6—49

திருக்குறள் - - - - பரப்பிடுவீர்!

திக்கெட்டுந் திருக்குறள் பரப்பிடுவீர்! —இந்தத்
திராவிட நாடெங்கும் பேருல கெங்கணும்
திக்கெட்டுந் திருக்குறள் பரப்பிடுவீர்!

மக்களின் வாழ்வு மலர்ந்திடச் சிலசில
சொற்களில் வள்ளுவன் சொல்லிய பெரும்பொருள்! (திக்)

உலக வாழ்வின் உயர்வினை உரைத்திடும்
ஒச்சும் அரசியல் முறையைக் கூறிடும்
இலகு மாந்தர்தம் காதல் நெறியினை
எடுத்துரைத் தின்பம் சேர்த்திடும் ஒருநூல்! (திக்.)

பாழும் புராணங்கள் நச்சுநீர் பாய்ச்சிப்
பகுத்தறி விழக்கச் செய்தமை நீக்கி
வாழும் முறையினை வாய்மை நெறிதனில்
வகுத்துநல் வழியினைக் காட்டிடும் பெருநூல்! (திக்.)

தமிழர்க் கொருநெறி வகுத்தவன் வள்ளுவன்
தந்த உயர்நூல் தானிந்த உலகில்
நமக்கினி இலக்கியம், வாழ்வின் குறிக்கோள்
நன்றாய் வாழவே ஒன்றாய் உலகமே! (திக்.)

—அம்மான்



வேண்டாத இந்தி!

பள்ளிகள் திறக்கப்படுகின்றன; பள்ளிகட்குப் புது ஆண்டு தொடங்குகிறது. அமைச்சர் அவினாசியார் கடைப்பிடித்த கொள்கைகளில் சிலவற்றை மாற்றம் செய்ய எண்ணியுள்ளனர் சென்னை அமைச்சர் குழுவினர்; அம் மாறுதல்கள் இப் புது ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

விலகியுள்ள கல்வியமைச்சர் கையாண்ட கல்வித் திட்டங்களில் பல குறையுண்டு; அவர் உணர்ச்சி வயப்பட்டுத் திடீர் திடீரெனப் பலமாறுதல்கள் செய்தார்; புதுத் திட்டங்களைக் கொண்டு வந்தார். அவற்றின் நன்மை தீமைகளை ஆராய்வது ஒருபுறமிருக்க, குறிப்பாக அவர் இந்தி மொழிப்பயிற்சிபற்றி வகுத்திருந்த திட்டம்பற்றிமட்டும் எண்ணிப் பார்க்கலாம்.

முதல் மொழி பிரதேச மொழி. அடுத்த மொழி இரண்டாவது மொழி யென்று வைத்து, அந்த மொழிகளுள் ஒன்று இந்தி யென்றார். இரண்டாவது மொழிப்பயிற்சி கட்டாயம் என்றார். ஆனால் "இந்திதான் பயிலவேண்டுமென்று நான் கட்டாயப்படுத்தவில்லை; எந்த இந்திய மொழியும் பயில வசதியுண்டு என் திட்டப்படி" என்றும் புகன்றார்; ஆனால் நடைமுறையில் பெரும்பாலும் எல்லாப் பள்ளிகளிலுமே இந்திதான் இரண்டாவது மொழியாகப் பயிற்றுவிக்கப்பட்டது. மற்ற மொழிகளைப் படிக்க மாணவர்கள் எண்ணினாலும், பள்ளிகளில் வசதியில்லாக் குறையால், விரும்பும் சிலரும், இந்தியையே படிக்கவேண்டியதாயிற்று. ஒவ்வொரு பள்ளியிலும் இந்திப் பண்டிதர் அவசியம் நியமனம் செய்யவேண்டுமென்ற கட்டளையும், மற்ற மொழிகளுக்கு ஆசிரியர் போடுவதானால் குறைந்தது இருபது மாணவர்களாவது அம்மொழி படிப்பவர்களாக இருக்கவேண்டுமென்ற விதியும், இரண்டாவது மொழி இந்திதான் என்ற நிலையில் கொண்டுவந்துவிட்டது.

மேலும் கடந்த ஆண்டுத் திட்டப்படி "இந்தி பள்ளிகளில் சொல்லித்தரப்பட்டதில் ஏற்பட்ட முன்னேற்றம் என்ன? மாணவர்கள் எவ்வளவு தொலை இந்திப்பயிற்சிபெற்றிருக்கிறார்கள்?" என்று சர்க்கார் விபரம் அறிந்துகொள்ள விரும்பியிருப்பார்களானால் பணம் வீண் விரயமாகியிருப்பதைத் தவிர வேறு பயனைக் கண்டிருக்க மாட்டார்கள். பையன்கட்கு இந்தி தெரிந்ததோ

தெரியவில்லையோ, 'மார்க்கு' மட்டும் நூற்றுக்குத் தொண்ணூறும், நூறும் கிடைத்திருக்கிற சந்தர்ப்பங்கள் எத்தனையோ உண்டு. இத்தகைய கேலிக்கூத்து இன்னும் நீடிக்க வேண்டுமா என்பதே நம் கேள்வி.

தமிழகம் மீண்டும் இந்திப்பயிற்சி கட்டாயமாவது கண்டு கொதித்தெழுந்து அறப்போர் நிகழ்த்தியும், எண்ணற்றவர்கள் சிறை சென்றும், தடியடிபட்டும், சொல்லவொண்ணா அடக்கு முறைக்கு ஆளாகியும், ஆங்காங்கே பொதுமக்கள் "இந்தி வேண்டியதில்லை" என்று ஊர்வலம், பொதுக்கூட்டம், தீர்மானம், மறியல் மூலம் அரசினருக்குத் தெளிவாக எடுத்துக் கூறியும், சென்னை அமைச்சர்குழு "இந்தி இனியும் வேண்டியதுதான்" என்று தீர்மானிக்குமானால் நாம் உண்மையிலேயே வருத்தமடைவோம். ஏனெனில் அம்முடிவு மீண்டும் இந்தி எதிர்ப்புப் போரை நாட்டிலே தொடங்கச் செய்யும் என்று நாம் நன்கு அறிவோம். இந்தி எதிர்ப்புப் போரெனில் அது எப்படி இருக்குமென்று ஓமந்தூராரையும் அவினாசியாரையும் கனம் குமாரசாமி ராஜா கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும். பின்னர் வேண்டுமானல் அவர் இந்தியைக் குழந்தைகட்குப் பாடமாக வைக்கட்டும்!

இந்தி நமக்குத் தேவையற்ற மொழி என்பதற்கு நாம் நூற்றுக் கணக்கான காரணங்களைக் காட்டமுடியும். ஒரு சிலருக்கு, வடநாட்டுச் சர்க்காரோடு தொடர்பு வைத்துக் கொள்வோருக்கு இந்தி தெரிய வேண்டுமென்பதற்காக எல்லாப் பிள்ளைகளையும் "இந்தியைப்படி" என்று கூறுவது எவ்வாறு நேர்மையாகும்? உத்தியோகம் கிடைத்தபின்னர்க்கூட "இந்தி" கற்றுக் கொள்ளலாமே! தேவையுள்ளவர்கள் சர்க்கார் பள்ளிகளில் வைப்பார்கள் என்று எதிர்பார்த்தா இருப்பார்கள்? இந்திப் பிரச்சார சபைதான் இருக்கிறதே! அங்கே கற்றுக்கொள்கிருர்கள். இப்பொழுதுதான் என்ன? கற்றுக்கொள்ள வேண்டுமென்கிற மாணவர்கள், பள்ளி இந்தி ஆசிரியர் சொல்லித் தருவதை மட்டும் நம்பி இருந்துவிடுகிருர்களா என்ன? "ஆங்கிலத்தைப் படித்துப் பிழைத்தோம்; இனி இந்தியைப்படித்துப் பிழைப்போம்" என்று தயாரிலிருக்கிற கூட்டத்தார்தானே இந்திப்பிரசாரசபைப் பட்டங்களையெல்லாம் பெற்றுக் கொண்டு போகிருர்கள்!

ஆகவே புதிய பிரதமர் இந்நிலைமையை நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்; இந்தியைக் கல்லூரி வகுப்புகளில் பாடமாக வைத்தால் போதும்; சிறுவர்கட்கு அவசியமே இல்லை. வீணாக இளம் பிள்ளைகளின் நேரத்தையும் சர்க்கார் பணத்தையும் வேண்டா இந்திக்கு விரயமாக்க வேண்டியதில்லை. அவினாசியார் செய்த தவறுதலைத் திருத்துவதன் மூலம் நாட்டுமக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு, அரியதொரு வாய்ப்பு, இந்தியைப் பொறுத்தவரையில் புதுப்பிரதமருக்குக் கிடைத்திருக்கிறது. வீண் பெருமையைக் கருதாது, நாட்டு மக்களின் கருத்தை உணர்ந்து கடமையைப் புரிவதே ஆட்சியாளருக்கு நேர்மையாகும்.

காலமும் கருத்தும்

கம்யூனிஸ்டு சீனா

சீனாவின் முக்கிய துறைமுக நகரம் ஷாங்காய் சீனக் கம்யூனிஸ்டுகள் வசமாகிவிட்டது; இனி சீனா முற்றும் கம்யூனிஸ்டுகள் ஆளுகைக்கு வர நாட்கள் அதிகம் செல்லாது என்றே தெரிகிறது. தலைவர் சியாங்கேஷேக் சீனாவில் செல்லாக் காசாகி வருகிறார்; சுரண்டுகிறவர்களின் கையில் ஆட்சி நிர்வாகம் சென்றால் என்ன நேருமென்பதைச் சீனா நன்கு காட்டுகிறது. மக்கள் சியாங்கிடம் நம்பிக்கையை இழக்க இழக்கக் கம்யூனிஸ்டுகள் சீனாவைத் தங்கள் வசப்படுத்தி வருகிறார்கள். அமெரிக்காகூடச் சியாங்கைக் கை கழுவிவிட்டுச் சீனக் கம்யூனிஸ்டுகளோடு இணக்கம் கொள்ள முயற்சி செய்கிறது; அமெரிக்கா 'ஆமாம்' போட்டால் உலகமே "ஆம்" என்று தலையசைத்த மாதிரிதான்! "தொல்லையே என்றும்" என்று எண்ணியிருந்த சீன மக்கட்குப் புது வாழ்வு தொடங்குகிறது. கம்யூனிஸ்டுகளின் ஆட்சி அவர்கட்கு நல்லாட்சியாக விளங்குமென்று நாம் எதிர்பார்ப்போமாக!

அறநிலைய மசோதா

உதகையில் அறநிலையப் பாதுகாப்புத் திருத்த மசோதா பற்றி 'செலக்ட் கமிட்டி' சாட்சிகளை விசாரிக்கிறது. மடங்களும் மடங்களை நம்பியிருப்பவர்களும், தேவஸ்தானங்களும் கச்சைகட்டிக்கொண்டு சாட்சி சொல்லியிருக்கின்றனர். டாக்டர் ராஜன் அண்மையில் இவர்களைப் பற்றிக் கூறும்போது "தங்கள் பிழைப்பில் மண்விழுகிறதே என்றுதான் இவர்கள் எதிர்க்கிறார்கள். மற்றபடி நிச்சயம் இம் மசோதா சட்டமாகிவிடும்" என்று குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறோம். கால தாமதமின்றி இம்மசோதாவைச் சட்டமாக்குவது நாட்டிற்குப் பெரும் பயனாகும் என்று கூற விரும்புகிறோம்.

கோவை மாநாடுகள்

கோவை மாவட்ட திராவிடர் கழக மாநாடும் திருக்குறள் மாநாடும் தலைவர் திரு டி. பி. வேதாசலம் அவர்கள் தலைமையிலும் தமிழ்ப் பெரியார் கல்யாண சுந்தரனார் அவர்கள் தலைமையிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன. அம் மாநாடுகளில் பெரியார் அவர்களும், தளபதி அண்ணா அவர்களும் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றியிருப்பதும் குறிப்பிடத் தக்கது. திராவிடர்கழக மாநாட்டில், நிறைவேறியுள்ள முடிவுகளில் குறிப்பாகத் திராவிடர் கழகச் சார்பில் புதிய தொழிற்சங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டு



மென்பதை நாம் மிகவும் வரவேற்கிறோம். தொழிலாளர்கள் திட்டமின்றிச் சீர்குலைந்துபோயிருக்கும் இந்நாட்களில் அவர்களைக் கட்சி நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ளாமல், அவர்களைக் கடைத்தேற்றுவது திராவிடர் கழகம் ஒன்றினால்தான் முடியும். மேலும் தலைவர் பெரியாரிடம்தான் தொழிலாளர்களுக்கு மனப்பூர்வமான நம்பிக்கை இருந்து வருகிறது. இவற்றைக் கருத்திற்கொண்டு கழகத் தொழிற் சங்கங்கள் எங்கும் நிறுவப்படும் நாளை நாம் வரவேற்போமாக.

புதுக்கோட்டையின் எதிர்காலம்

“புதுக்கோட்டை திருச்சி மாவட்டத்தோடு இணைக்கப் பட்டுவிட்டது; இனி அது தான் முடிவு” என்று மக்கள் நம்பும்படியாகக் கனம் கோபால் ரெட்டி புதுக்கோட்டைக்கு வந்தபோது அவர் பேசிய பேச்சுக்கள் அமைந்திருந்தன. ஆனால் அவர் அண்மையில் குறிப்பிட்டுள்ளபடி பார்த்தால் திருச்சி மாவட்டத்திலேயே புதுக்கோட்டை டிவிஷன் இருப்பது நிச்சயமல்ல என்றாகிறது. டில்லி சர்க்கார் புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்குமாறு வற்புறுத்துவார்களென்று தெரிகிறது. அப்படி அவர்கள வற்புறுத்தும்போது சென்னை சர்க்கார் ஏன் குறுக்கே நிற்க வேண்டுமென்று நமக்குப்புரியவில்லை. எந்த முடிவானாலும் விரைவில் செய்வது நன்மை பயக்குமென்பதைச் சென்னை சர்க்காருக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.



வம்பு மடம்

-ஆண்டி-

சென்னை அமைச்சர் குழுவில் திருவாளர் ரோச் விக்டோரியா அவர்கள் புது அங்கத்தினராயிருக்கிறார். உணவு அமைச்சர் அவர். பதவிக்கு வந்ததும் "மக்கள் கலப்புணவு சாப்பிடவேண்டும்" என்று அவர் வேண்டிக் கொண்டிருக்கிறார் அத்தனைபேரும் அரிசியே வேண்டும் என்று கேட்டால் அவர் என்ன செய்வார்? கிடைக்கின்ற தானியங்கள், பழங்கள், காய்கறிகள், மீன்வகைகள், மாமிசவகைகள் அனைத்தையும் கலந்து சாப்பிட வேண்டுமென்று அவர் விரும்புவதில் நியாயம் இருக்கிறது; ஆனால் பொதுமக்கள் எங்கே இந்த நியாயத்தைப் புரிந்து கொள்ளப் போகிறார்கள்!

உணவுப்பிரச்னையில் "கலப்பு" அவசியம் என்று அமைச்சர்கள் சொல்வதை மக்கள் கேட்பதில்லை! ஆனால் அரிசியில் கல், மண் கலப்பதையும், விளக்கெண்ணெயில் தண்ணீர் கலப்பதையும், அவர்களால் தடுக்கமுடிவதில்லை, மந்திரிகளின் "எண்ணத்தை" ரேஷன் வியாபாரிகள் கல்லையும், மண்ணையும், பெருச்சாளிப் புழுக்கையையும், அரிசி, கோதுமை, ரவை இவற்றில் கலப்பதன்மூலம் நிறைவேற்றி வைக்கிறார்கள். ஆகவே நம் மக்கள் காய்கறி — தானியம் சேர்ந்த கலப்புணவு கொள்ளாவிட்டாலும் கல் — மண்கலப்பு உணவு சாப்பிட்டுக் கொண்டு தான் வருகிறாகள்! தேசிய உடை என்பதற்காகக் "கதர்" அணிந்து தீரவேண்டிய துயரத்திற்குள்ளாகி யிருக்கும் தேச பக்தர்களைப்போல தேசிய உணவாக இக்கலப்புணவை மக்கள் பொறுமையுடன் சாப்பிட்டு வருகிறார்கள்.

ஆனால் வெளி நாட்டுக்கு ஏற்றுமதிசெய்யும் பொருள்களிலும் நம் நாட்டுவணிகர்கள் இந்தக் 'கெட்டிக்காரத்தனத்தை'க் கையாள்கிறார்களாம்! நம் நாட்டில் வேண்டுமானால் பாராட்டுக் கிடைக்கும்! வெளி நாட்டாரும் பொறுத்துக்கொள்வார்களா என்ன? குப்பையும் செத்தையும், புழுக்கைகளும் மண்ணும் கல்லும் கலந்த சரக்குகள் இந்தியாவினின்று வருவதாக அமெரிக்கா இந்திய சர்க்காருக்குப் புகார் அனுப்பியுள்ளது. வர்த்தக அமைச்சர் நியோகி அதனை வெளியிட்டு நம் வர்த்தகர்கள் நாணயமாக நடந்து கொள்ளவேண்டுமென்றும் இல்லையேல் இந்தியச் சரக்குகளுக்கே வெளிநாட்டில் மார்க்கட் இராது என்றும் எச்சரித்திருக்கிறார்!


புதிய மந்திரியைச் சேர்த்துக் கொண்டதனால் மந்திரிசபை இலாக்காக்களிலும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பிடத்தக்க மாறுதல் கனம் மாதவமேனன் கல்வியமைச்ச ராகியிருப்பதுதான்! இந்தித்திட்டத்தைப்பற்றி அவர் என்ன கருத்துக் கொண்டுள்ளார் என்பது நமக்குத் தெரிந்ததுதான்! என்றாலும் இம் முக்கிய பிரச்னை மந்திரிசபையே முடிவு செய்யவேண்டு மாதலால், கனம் மாதவமேனனின் 'செல்வாக்கு' அம் முடிவை எவ்வளவு தொலை பாதிக்குமென்று நம்மால் கூறமுடியாது, ஆனால் ஒன்றுமட்டும் திண்ணம். அன்பர் அவினாசியார்போல் இவர் ஒன்றும் புதிய சீர்திருத்தங்கள் செய்யமாட்டார். கல்வி இலாகா அமைதியாக இருக்குமென்பதுமட்டும் நிச்சயமான செய்தி!

டில்லியில் இந்திப்பித்தம் சிலருக்குத் தலைக்கேறி விட்டதென்று தெரிகிறது- தங்கள் கார்களில் ஹிந்தி எண்களிட்டு ஓட்டிச் சென்றார்களாம். போலீஸ்காரர்கட்குப் புதுத் தொல்லை! அந்தக்காரின் எண்ணை அறிந்துகொள்ள வேண்டுமென்றால் இந்தி தெரிந்த போலீஸ்காரர் வேண்டும்! இப்படியெல்லாம் சங்கடம் நேருவதைத் தவிர்ப்பதற்காக இந்தி எண்ணிட்ட காரின் சொந்தக்காரர்களுக்கு அபராதம் விதித்துவிட்டார்கள். அபராதம் செலுத்தியவர்கள் பார்லிமெண்ட் உறுப்பினர்கள்: டில்லி போலீஸார் அபராதம் விதித்தவர்கள்! எப்படி இருக்கிறது, வேடிக்கை! "சுதந்தர இந்தியாவின் தலைநகரில் இந்தி எண்ணிட்ட கார் ஓட்டச் சுதந்தரம் இல்லாமலிருப்பது நம் சுதந்தரத்திற்கே அவமானம்" என்பதாக டில்லி பார்லிமெண்டில் "இந்திப் பிரியர்" ஒருவர் புகார் செய்திருக்கிறார். டில்லி போலீஸாருக்கு முதலில் "கட்டாய இந்திப் பயிற்சி" வைத்து விட்டல்லவோ, சென்னை மாகாணத்திற்கு வரவேண்டும், அரசியலார்! சென்னை அமைச்சர்கள் அவசர அவசரமாக எதையும் செய்துவிடுகிறார்கள்!

பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் திறக்கப் போகிறார்களல்லவா? பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்குப் பெற்றோர்கள் இப்போதே 'முஸ்தீபு' செய்வது இயற்கைதானே! ஆனால் சிலபத்திரிகைகளும் "முன்னேற்பாட்டுடன்" ஓலமிடத் தொடங்கியிருக்கின்றன. கல்லூரிகளில் வகுப்புவாரியாக மாணவர்களைச் சேர்க்கிறார்களல்லவா? "இதுகூடாது; சென்னைக்கே அவமானம்" என்ற கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன ஓலத்தை மறுபடியும் ஆரம்பித்திருக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள் திறக்கப் படும் சந்தர்ப்பத்தில் இந்த ஒப்பாரி நடப்பது வழக்கம். அந்தவழக்கப்படி இந்த ஆண்டும் 'ஒப்பாரி' வைத்திருக்கிறார்கள். இதே சமயத்தில்தான் சென்னைக் கடற்கரையில் சுறாமீன்கள் வருகின்றன. பறக்கும் மீன்களைப் பிடித்துத் தின்னவே இந்தச் சுறாமீன்கள் வருவதாகவும், ஆகவே இந்தப் பறக்கும் மீன்களை முற்றும் பிடித்துவிட்டால் சுறாமீன் ஆபத்துக் குறையுமென்றும் சென்னை சர்க்கார் முன்னேற்பாடாக ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். அதே போலத்தான் கல்வி நீரோடையில் சுறாமீன்கள் புகுந்து கொள்ளத் தடுப்பதற்காக "வகுப்புவாரிப் பிரதிநிதித்வ" ஏற்பாட்டை அமுல் நடத்துகிறார்கள். சுறாமீன்களால் அபாயம் உண்டென்றால், 'திறமைக்கே முதலிடம்' என்று கூப்பாடுபோடும் 'மேல்சாதிச் சுறாமீன்'ளாலும் நிச்சயமாகப் பொதுமக்கட்குத் தீங்கு உண்டு.

லண்டனில் வாழும் இரண்டாயிரம் இந்துக்களின் குறையொன்று நெடுநாட்களாக நிறைவேறாமல் இருக்கிறதாம்! அவர்கட்கு உணவு இல்லையா? தங்க உறையுள் இல்லையா? உடுத்த ஆடையில்லையா? என்ன குறை அவர்கட்கு? நேரு லண்டனுக்கு அடிக்கடி பறந்து வருகிறாரே, அவரிடம் சொல்லக்கூடாதா, இக்குறையை என்று நீங்கள் அவசரப் பட்டு முடிவுகட்டி விடுகிறீர்கள்! எல்லாமிருக்கிறது, அவர்கட்கு! எல்லாமிருந்தும் என்னபயன்? "கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்று எழுதி வைத்தவன் வாயில் சர்க்கரை போடவேண்டும். அந்த பழமொழி லண்டன்மாநகரில் வாழும் இந்துக்களின் மனச்சாட்சியையும உறுத்துகிறது, பார்த்தீர்களா? இந்தியக் கிறிஸ்தவர்கள் தங்கட்கென மாதாகோவில் கட்டிக் கொண்டார்களாம். இந்துக்களுக்குத்தான்

கோயில் இல்லையாம்! நேரலாமா? உலகம்தான் பொறுக்குமா? அங்கேயுள்ள ஒரு மகானுபாவர் கோயில் கட்டும் முயற்சியைத் தொடங்கிவிட்டார்; 13 லட்சத்தில் திட்டம். எல்லோரும் தாராளமாக உதவவேண்டுமென்று அறிக்கை விட்டிருக்கிறார். அவருக்கு இன்னொரு குறையும் நெஞ்சை உறுத்துகிறது. சரியான புரோகிதர் ஒருவர் அங்கே இல்லையாம்! அதனால் இந்துமதசம்பிரதாயப்படி சடங்குகள் நடக்க முடிவதில்லையாம்! இந்தச்செய்தி உங்கட்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? "காலியான இடம்" தெரிந்தும் நம் நாட்டினின்றும் ஒரு புரோகிதர்கூட அங்கே போகாதது நமக்கு வியப்பாயிருக்கிறதல்லவா? "பார்ப்பனர்கள் கடல் கடக்கக் கூடாது" என்ற நியதியை லண்டன் விஷயத்தில் மட்டும் அனுசரிக்கிறார்களா என்ன? நேரு உதாரணம் காட்டிய பின்னும் புரோகிதர்கள் பயப்படவேண்டியதில்லையென்று நாம் தைரியம் கூற விரும்புகிறோம். மேலும் தென்னாட்டில் புரோகிதர்கட்கு வரவர வேலை குறைந்து வருகிறது. எனவே அங்கேயுள்ள இரண்டாயிரம் இந்துக்களுக்கும் ஆளுக்கொரு புரோகிதர் வேண்டுமானாலும் அனுப்பத் தென்னாடு காத்திருக்கிறது. "புரோகிதர் கப்பல்" என்று தனிக்கப்பல் வேண்டுமானாலும் லண்டனுக்குச் சென்னையினின்றும் புறப்படட்டும்! சிறிதும் இவ்விஷயத்தில் தாமதம் கூடாது. பக்தர்கள் தானதருமம் செய்வதோடு, ஒரு புரோகிதரையேனும் லண்டனுக்கு அனுப்பிவைத்துப் புண்ணியத்தைக் கட்டிக்கொள்வார்களாக.



தமிழன் . . .
தொடுத்த போர்

ஆசிரியர்: மா. இளஞ்செழியன். B. A., (Hons); வெளியிட்டோர்: பகுத்தறிவுப் பாசறை, பவளக்காரத்தெரு, சென்னை 1; 224-பக்கங்கள்; விலை ரூ. 1—12—0

ஆச்சாரியார் ஆளவந்தாராய் வந்தார்; பன்னிரெண்டு ஆண்டுகட்கு முன்பு, காங்கிரஸ் மந்திரி சபைகள் எல்லா மாகாணங்களிலும் ஏற்பட்டன. அப்போதுதான் சென்னை மாகாணத்தில் ஆச்சாரியார் முதல்வராய் ஆட்சி பீடத்தில் ஏறினார். ஆட்சிப் பிடி தம் வசம் ஆனதும் அவர் அவசர அவசரமாகத் தம் நெடு நாளைய எண்ணத்தைச் செயலில் காட்டத் தொடங்கினார்; ஆம். இந்திக் கட்டாயம் அவர் ஆட்சியில் கனிந்த முதற் கனி! அவருக்கு நற் கனியாய்த் தோன்றியது தமிழருக்கு எட்டிப்பழமாயிற்று. சிறுவர்கட்குக் கட்டாய இந்திப் பயிற்சி; தமிழாம் தாய்மொழியே கட்டாயமில்லாதபோது வேற்று மொழிக்குப் பள்ளியில் ஆதிக்கம்! இந்தப் பொல்லாங்கினைத் தமிழர் வரவேற்கத் தயாராயில்லை; கொதிப்பு தமிழரிடையே எழுந்தது! ஆச்சாரியார் ஆட்சியினர் தமிழரின் எதிர்ப்பை இந்திக் கட்டாயம் மூலம் வலியவிலைக்கு வாங்கினர்; மூன்று ஆண்டுப் போராட்டம். '1937 முதல் 1940 வரை தமிழகத்தையே ஒரு குமுறும் உள்ளமாக, ஒரு கொந்தளிக்கும் கடலாக, சுழன்று சுழன்றடிக்கும் பெரியதோர் சூறுவளியாக மாற்றியமைத்த, அந்தப் போராட்டத்தின் இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் வரலாறுதான் "தமிழன் தொடுத்த போர்" என்னும் பெயரிய நூலாக நமக்கு நண்பர் இளஞ்செழியனால் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியைப் புகுத்தப்போவதாக ஆச்சாரியார் இராமகிருஷ்ண மடத்தில் குறிப்பிட்டது தொடங்கி, இந்தி எடுபட்டுத் தமிழர் வெற்றிநாள் காணும்வரை, விரிவாக விளக்கமாக எந்நிகழ்ச்சியையும் விடாது முறையாகப் பகுத்துக்கொண்டு இந்நூல் வரையப்பட்டிருக்கிறது. ஆரிய திராவிடப் போராட்டத்தின் ஒரு பகுதியே நடந்த இந்தி எதிர்ப்பியக்கம்என்பதும், இந்தி

வந்தவுடன் பெரியார் தலைமையில் செந்தமிழர் திரண்டு சூளுரைத்ததும், சிறைச்சாலை ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண், பெண், குழந்தைகட்கு அடைக்கலந் தர நேர்ந்ததும், இந்தி எதிர்ப்புத் தலைவர்களின் இயல்புகளின் சிறப்பு இவை என்றவிளக்கமும், அவர்களின் கூட்டு முயற்சிதான் வெற்றிக்கு உரமாயிற்று என்பதும், திருச்சியினின்றும் சென்னை வரை கால் நடையாய்ச் சென்ற தமிழர் பெரும் படையின் சிறப்பும், மங்கைமார் 'இந்திஎதிர்ப்பு எம் எதிர்ப்பு' எனப்போர்முரசு கொட்டிய விதமும், ஆட்சி பீடம் பெரியாரைச் சிறைப்படுத்தி, ஆணவமழிந்த காதையும், இந்திக் கொள்ளை நோய்க்குத் தமிழர் தந்த பலியெனச் சிறையில் மடிந்த தாளமுத்து நடராசனைப் பற்றிய சோக சித்திரமும், பெரியார் விடுதலையும், இந்தி வீழ்ந்த விதமும் அத்தியாயத்திற்குப் பின் அத்தியாயமாக இந்நூலில் தீட்டப்பட்டுள்ளன.

பெரியார் தம அணிந்துரையில் கூறுவதுபோல, இந்நூலைப் படிப்போர்க்கு மற்றும் மொரு 'இயக்கம்' இதுபோலத் தோன்றாதா, நாமும் அதிற் பங்குகொள்ளோமா என்றே தோன்றும்! ஒரு நிகழ்ச்சியைப் படம் பிடித்து மீண்டும் திரையிலே போட்டுக் காண்பிக்கிறார்கள்; எங்கெங்கோ நடக்கும் நிகழ்ச்சிகளை நாம் திரும்பத் திரும்பப் பார்க்க இயலும் வகை சினிமா செய்து தந்திருக்கிறது. தோழர் இளஞ்செழியன் அவர்களும் 1937—40 இந்திப் போரைத் தம் நூல் மூலம் படம் பிடித்து விட்டார் என்றே சொல்ல வேண்டும்; ஏனெனில் அந்நூலைப்படிப்போர் தம் கண்முன் அந்நிகழ்ச்சியை, அன்று தமிழன் தொடுத்த போரை மீண்டும் தம் மனத் திரையிலேயே காணும்படி உணர்ச்சிச் சித்திரமாகத் தீட்டப்பட்டிருக்கிறது இவ்வரலாறு. மீண்டும் அமைச்சர் அவினாசியார் காலத்து இந்தி எதிர்ப்புப் போரின்போது, இந்நூலைக் காண்பதும் படிப்பதும் தமிழ் மக்கட்குப் பெரும் பயன் தருவதாக அமைந்திருக்கிறது என்று நாம் கூற வேண்டியதில்லை.

"போர்வாள்' ஆசிரியர் இளஞ்செழியனைத் தமிழகம் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறது; கிழமை தோறும் அவர் தீட்டிவரும் கட்டுரைகள் தமிழர்க்குத் தேனினும் தீங்கரும்பினும் மிக்க இனிப்பை நல்குவதோடு, ஆட்சியினருக்குத் தேள்கொட்டிற்றே என்று



பல்நோயாளி: ஏனுங்க, புதிசாப் பல் கட்டினபின்னும் முன்னே மாதிரியே வலிக்குதுங்களே.

டாக்டர்: அதுதான் நான் முதல்லே சொன்னேனே, நிஜப்பல் மாதிரியேதானிருக்குமென்று.

தோன்றுமாறும் செய்கின்றன. என்பதை நாம் அறிவோம். அவர் எழுத்திலே அழகு தமிழ் நடையை காண்கிறோம்; உயிரற்ற நடையா அது! அல்லவே அல்ல! ஆற்றல் வாய்ந்தது; மாற்றார் மனப்புண்ணை ஆற்ற வல்லது; வீரம் செறிந்தது! "போர்வாள்" நமக்கு மற்றொரு "திராவிடநாடு" என்று தமிழர் பூரிப்புக் கொள்வதை நான் கண்டிருக்கிறேன். எனவே தான் இளஞ்செழியனாரின் எழுத்துவல்லமை இன்னதென அறிமுகம் செய்ய நான் அஞ்சுகிறேன். நிற்க.

'தமிழன் தொடுத்த போர்' அரியதொரு இலக்கியம். நிகழ்ச்சிகளைத் தேதியிட்டுத் தொகுத்துக் கூறியதோடு, அமையவில்லை இளஞ்செழியன்! 'படித்தால் கசக்கும் வரலாறு' நூல்கள் தாம் நிறைய உண்டு. அந்தப் பாணியை மறந்து, படிப்பாரைத் தம் வசப்படுத்தும் பாங்கில் இந்நூலை வரைந்திருக்கிறார். விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் பெரியாரின் சுவை மிகுந்த பேச்சோ, அண்ணாவின் அரியதொரு கட்டுரையோ, புரட்சிக் கவிஞரின் புதுப் பாட்டோ என நீங்கள் வியக்கும் வகையில், சுவை ததும்ப, உணர்ச்சியுந்த, நிகழ்ச்சிகளைச் சிறு சிறு சித்திரங்களாக அவர் தீட்டியிருப்பதை நாம் காண்கிறோம். அவ்வப்போது இந்தப் போரைப்பற்றிப் பத்திரிகைகள் எழுதிய கருத்துக்கள், ஆங்காங்கே நிகழ்ந்த முக்கிய சொற்பொழிவுகள், "குடியரசு" "விடுதலை" தீட்டிய தலையங்கப்பகுதிகள்! பெரியவர்கள், அறிஞர்கள் வெளியிட்ட அறிக்கைகள், கருத்துரைகள், முதலியவற்றை இடையிடையே பின்னி "இந்தி எதிர்ப்பு வரலாறு" நிகழ்ந்த விதம் இது என நமக்குத் தெளிவாகக் காட்டியுள்ளார்.

"அழகிய வெண்தாடி அசைந்தாட, மேலே போர்த்துக் கொண்டிருக்கும் சால்வை காற்றுடன் விளையாட, ஒளிபொருந்திய கண்கள் அஞ்சாமையை அள்ளிஅள்ளி வீசப் பசுந்தமிழில் பகுத்தறிவைக் கலந்து, கொச்சை மொழியில் மிகச் சிறந்த கருத்துக்களை எடுத்தெடுத்துப் பேசும் போதும், பார்க்க வேண்டுமே, அந்தச் செந்தமிழ் நாட்டுச் சிந்தனைச் சிற்பியை!"

இத்தகைய இனிய, எளிய தமிழில்தான் நூல்முற்றும் வரையப்பட்டிருக்கிறது எனில் வேறு விளக்கம் வேண்டியதில்லை. அறிஞர் அண்ணாத்துரை கூறுவதுபோன்று, "தமிழரின் பெருங்காதையிலே விழித்தெழுபடலமாக" இந்நூல் விளங்குகிறது. தமிழர் தம்மை உணர்ந்த விதத்திற்காக ஒரு முறை. பெரியாரின் தலைமை தமிழர்க்கு வெற்றியைப் பெற்றுத் தந்த விதத்தை அறிய ஒரு முறை, ஆச்சாரியாரின் ஆணவப் போக்கு எப்படித் துயர முடிவாக மாறிற்று என்ற விளக்கம் அறிய ஒரு முறை நண்பர் இளஞ்செழியனாரின் இனிய தமிழ் நடைக்காக ஒரு முறை இந்நூலைத் தமிழ் மக்கள் படித்துத்தான் தீரவேண்டும்; இல்லையேல் பெரும் பயனை – கண்ணெதிரே கிடைத்துள்ளபயனை - அவர்கள் இழக்கிறார்கள் என்றுதான் பொருள்!

– முருகு சுப்பிரமணியன்



கண் திறக்கும

— நக்கீரன் —

நடந்த கதை

வாழ்க்கையில் பல சோதனைகளுக்கு ஆளான சந்திரமோகன், தன் கடைசி சாலத்தில் தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் நோக்கி "கண் திறக்குமா?" என்ற கேள்வியுடன் தன 'கதை'யைச் சொல்ல ஆரம்பிக்கிறான்.

சட்டப் பரிட்சையில் தேறிய சந்திரமோகன் பாரிஸ்டர் பரந்தாமனிடம் தொழிற்பயிற்சி பெறுகிறான். இந்தச் சமயத்தில். ரௌலட் சட்டத்தை எதிர்த்துக் காந்தி மகாத்மா கைதியானார் எனபதற்காகத் தேசமெங்கும் அவருடைய விடுதலையைக் கோரிக் கிளர்ச்சி செய்யப் படுகிறது. பாரிஸ்டர் பரந்தாமன், காந்திஜி கைதியானதற்காகப் பரம சந்தோஷப்படுகிறார். சந்திரமோகனுக்கு இது பிடிககவில்லை. அவன் அந்தக்கிளர்ச்சியில்பங்கெடுத்துக்கொண்ட தன் பயனாகப் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறான். அங்கே தன்னைப் போலவே சிகிச்சை பெறுவதற்காக வந்திருந்த பாஸ்கரன் என்னும் பள்ளித்தோழனை அவன் காண நேருகிறது.

ஒருநாள பாரிஸ்டர் பரந்தாமனின் ஏக புதல்வி சாந்தினி எதிர்பாராத விதமாகச் சந்திரமோகனை ஆஸ்பத்திரியில் சந்தித்து 'என்னை மறவாதீர்!'' என்று கேட்டுக் கொள்ளுகிறாள்

இதற்கு மத்தியில் சந்திரமோகனைப் பிரிந்த தாயார் இயற்கை எய்துகிறாள். தன்னந்தனியளான அவன் தங்கை பரிமளாவுக்குச் சாந்தினி ஆறுதல் கூறுகிறாள். தஞ்சையிலிருந்து வந்திருந்த பரிமளாவின் மாமா அவளைத் தம்முடன் அழைத்துச் செல்கிறார். தன் அண்ணாவில் செய்கையில் வெறுப்புக் கொண்ட பரிமளா, தாயார் இறந்ததைப் பற்றி மட்டுந்தான் அவனுக்குத் தெரிவித்தாளே தவிர, தான் தஞ்சைக்குச் சென்றுவிட்டதைப் பற்றித் தெரிவிக்கவில்லை.

விஷயம் தெரியாத சந்திரமோகன் விடுதலையடைந்ததும், நேரே சென்னைக்கு வருகிறான், தன் வீட்டில் வேறு யாரோ குடியிருப்பதைக் கண்டதும் அன்றிரவைப் பாரிஸ்டர் பரந்தாமன் வீட்டில் கழிக்கலாம் என்ற உத்தேசத்துடன் செல்கிறான் அங்கே அவனுக்கென்று ஓர் அதிசயம் காத்திருக்கிறது. ஏகாதிபத்திய பக்தரான பாரிஸ்டர் அசல் காந்தி பக்தராகக் காட்சியளிக்கிறார்!

பரிமளா தன் மாமாவின் மகனான சிவகுமாரனால் விரசமாக நடத்தப் படுகிறாள் என்ற செய்தி, சாந்தினி வாயிலாகச்சந்திரமோகனின் காதில் விழுகிறது. உடனே அவன் தஞ்சைக்குச் செல்கிறான். வழியில் சிவகுமாரனால் வஞ்சிக்கப்பட்ட செங்கமலத்திற்கு அவன் ஒரு சிறு உதவி செய்ய நேருகிறது. அப்பொழுதுதான் ஈன்றெடுத்த சின்னஞ்சிறு சிசுவுடன் செங்கமலம் காட்சியளிக்கிறாள். செங்கமலத்துக்காக இரங்கிய சந்திரமோகன், அவளையும் அவள் தாயாரையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு தன் மாமாவின கிராமமான செய்யாமங்கலத்துக்குச் செல்கிறான். அங்கே பரிமளாவைக் காணவில்லை. அவன நினைத்தபடி சிவகுமாரனிடம் செங்கமலத்தைச் சேர்க்கும் முயற்சியிலும் அவனுக்குத் தோல்வியே ஏற்படுகிறது. ஆகவே வேறு வழியின்றி அவன அவர்களுடன் சென்னைக்குத் திரும்புகிறான்.

வழியில் செங்கமலத்தின் தாயார் ஊர் வாயை அடைப்பதற்காகத் தன் மகளுக்குத் தானே தாலியைக் கட்டி வைக்கிறாள். அதைக்கண்டு வியந்த சந்திரமோகனுக்கு

அவள் தன் கதையைச் சொல்கிறாள். தான் ஏற்கெனவே கல்யாணம் செய்து கொண்டிருந்த ஒரு பிராமணரைக் காதலித்து மணந்ததாகவும், அவர் இறந்தபிறகு தான் 'சூத்திரச்சி' என்பதற்காக அவருடைய சொத்தில் தனக்கு ஒன்றும் பங்கு கிடைக்கவில்லை என்றும் அதன் பயனாகத் தானும் தன் மகளும் நாதியற்று நிற்க நேர்ந்ததாகவும அவள் கூறுகிறாள்.

செங்கமலம், அவளுடைய தாயார், சந்திரமோகன் ஆகிய மூவரும் எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கும்போது, எதிர்பாராத விதமாக அங்கு வந்திருந்த பாஸ்கரன் செங்கமலத்தின் தாயாரைக் கண்டதும் 'சித்தி!' என்கிறான். இதிலிருந்து செங்கமலத்தின் தாயாரைக் காதலித்து மணந்த பிராமணனின் மகன் பாஸ்கரன் என்று தெரியவருகிறது.

சந்திரமோகன் வருவதற்கு முன்னால் பாரிஸ்டரின் உதவியால் அவனுடைய வீடு காலி செய்து வைக்கப்பட்டிருக்கிறது. பரிமளாவும் அதற்குள் அங்கு வந்து சேர்ந்திருக்கிறாள். அவள் அண்ணாவைக் கண்டதும், "இன்னொருமுறை தேசத்துக்காகச் சிறை செல்வதாக இருந்தால் எனக்கு ஒருதுளி நல்லவிஷமாகப் பார்த்து வாங்கிக்கொண்டுவந்து கொடுத்துவிடு!" என்று அழாக்குறையாகக் கேட்டுக்கொள்கிறாள்.

ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாகச் சந்திரமோகன் வக்கீல் தொழிலை மேற்கொள்ள விரும்பவில்லை. ஆகவே, அவன் 'தினபந்து' என்னும் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கத் திட்டம் போடுகிறான். அதற்காகத் தன் வீட்டை அடமானம் வைத்துப் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்குகிறான்.

நாளடைவில் சந்திரமோகனுக்கும் சாந்தினிக்கும் இடையே உதித்த காதல் வளர்ந்துவருகிறது. ஒருநாள் சாந்தினி தன் 'டயரி'யை மறந்து வீட்டில் வைத்துவிடுகிறாள். அவற்றைப் பார்த்த பாரிஸ்டருக்கு எல்லா விஷயமும் தெரிந்து விடுகிறது. 'உங்களுடைய காதலுக்குக் குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை' என்று அவர் சந்திரமோகனிடம் சொல்லி விடுகிறார்.

வெளியே சென்றிருந்த சந்திரமோகன் ஒரு நாள் வீடு திரும்பும்போது, தன் வீட்டில் யாரோ முன்பின் அறியாத ஒருவன் வந்து பரிமளாவுடன் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்துத் திடுக்கிடுகிறான். கடைசியில், அவன் தஞ்சையிலிருந்த தன்னந்தனியாக வந்த பரிமளாவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தவன் என்று தெரிகிறது. அவனுக்கே பரிமளாவைக் கல்யாணம் செய்து வைத்துவிட்டால் என்ன என்று சந்திரமோகனுக்குத் தோன்றுகிறது.

இதற்கிடையில் 'சூத்திரச்சி' என்பதற்காக நீதிமன்றம் வழங்காத நீதியைப் பாஸ்கரன் செங்கமலத்திற்கும் அவள் தாயாருக்கும் வழங்குகிறான். தன்னுடைய சொத்தில் பாதியைப் பகிர்ந்து அவர்களுக்குக் கொடுப்பதோடு, அவன் தான் அதுவரை அணிந்திருந்த பூணூலைக் கழற்றி எறிந்து ஆரிய வஞ்சக வாழ்விலிருந்து விடுதலை பெறுகிறான்.

இந்தச் சமயத்தில்தான் தான் கற்பழிக்க முயன்ற ஒருத்தியால் சிவகுமாரன் குத்திக் கொல்லப்பட்டான் என்ற செய்தி பத்திரிகையில் வெளியாகிறது. சந்திரமோகனும் பரிமளாவும் அவனுக்கென்று ஒரு முழுக்குப் போட்டு வைக்கின்றனர்.

சிவகுமாரனுக்கு நேர்ந்த கதியைக் குறித்துச் செங்கமலம் கண்ணீர் வடிக்கிறாள். அத்துடன் நில்லாமல் அவனுக்காகத் தன் அன்னை கட்டிய தாலியையும் அறுத்தெறிகிறாள்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு பரிமளாவுக்கும் மணவாளனுக்கும் திருமணம் நடந்தேறுகிறது, சந்திரமோகன், பாஸ்கரன், மணவாளன் ஆகிய மூவரின் கூட்டுமுயற்சியால் "தினபந்து" உதயமாகி அஸ்தமித்தும் விடுகிறது. உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சந்திரமோகன் மீண்டும் சிறைக்குச் செல்கிறான், அங்கே பாரிஸ்டர் பரந்தாமனைச் சந்திக்கிறான், ஆம், அவரும் வேதாரண்யத்தில் கைது செய்யப்பட்டுச் சிறைக்கு வந்திருக்கிறான், அவர் மூலம் இன்னொரு திடுக்கிடும் செய்தியையும் சந்திரமோகன் கேள்விப்படுகிறான், அதாவது தலைமறைவாயிருந்த ஒரு கைதியை வேண்டுமென்றே ஆதரித்து, அதன்பயனாகக் குற்றாலலிங்கமும் சிறை சென்றிருக்கிறார் என்னும் செய்திதான் அது.

இருபத்துமூன்றும் அத்தியாயம்
சாந்தினி வந்தாள்

மறுநாள் தன் அப்பாவைப் பார்த்துவிட்டுப் போவதற்காகச் சாந்தினி நாங்கள் இருந்த சிறைச்சாலைக்கு வந்திருந்தாள். பாரிஸ்டர் பரந்தாமன் 'ஏ' வகுப்புக் கைதியாகவும் நான் 'பி' வகுப்புக் கைதியாகவும் இருந்தது அவளுக்

குப் பிடிக்கவில்லை. "வெளியே 'எல்லோரும் ஒரு குலம்' 'எல்லோரும் ஒரு இனம்' என்று பிரசாரம் செய்கிறீர்களே அந்தப் பிரசாரத்தை இங்கேயும் ஆரம்பித்தாலென்ன?" என்று அவள் கேட்டாள்.

"அது வேறு விஷயம் இது வேறுவிஷயம்" என்றேன் நான்.

வழக்கம்போல் பாரிஸ்டர் பரந்தாமன் நான் வேண்டாமலே குறுக்கிட்டு," அதுவேறு விஷயமுமில்லை. இது வேறு விஷயமுமில்லை" வெளியே சமதர்மப் பிரசாரம் செய்தால் அது சொந்த விஷயத்தைஒன்றும் பாதிக்காது; இங்கே செய்தால் அது சொந்தவிஷயத்தையல்லவா பாதிக்கும்!" என்றார்.

எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. "அப்படியானால் உயிரைத் துச்சமாக மதித்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு போராடும் நம் அருமைத் தலைவர்கள் கூடவா சுயநலத்தைக் கருதிச் சிறைக்குள் சமதர்மம் பேசாமல் இருக்கிறார்கள்?" என்று எரிந்து விழுந்தேன்.

"சந்தேகமென்ன? நாம் காங்கிரஸ்காரர்களாதலால் பத்திரிகையில் எழுத முடியாமலும் பொதுக் கூட்டங்களில் பேச முடியாமலும் இருக்கும் விஷயங்களில் இதுவும் ஒன்று. இத்தகைய விஷயங்களைப் பற்றி நமக்குள் நாமே வெளிப்படையாகப் பேசிக் கொள்வதில் என்ன தவறு? வெளியே தான் பொய்யைப் பேசிப் பொது ஜனங்களை ஏமாற்றுகிறோமென்றால், நமக்குள்ளேயுமா நாம் பொய்யைச் சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டும்?"

"ரொம்ப அழகுதான்! முதலில் வெளியே பேசும் சமதர்மம் சொந்த விஷயத்தைப் பாதிக்காது என்று நீங்கள் சொல்லுகிறீர்களே, அதுவே தவறு. வெள்ளைக்காரன் இந்த நாட்டைவிட்டு வெளியேறும் வரை வேண்டுமானால் தங்களுடைய அபிப்ராயம் சரியாயிருக்கலாம். அவன் போனபிறகு இந்தநாட்டில் சமதர்மம் உதயமாவது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயம் அது நம்மையும் நம் தலைவர்களையும் பாதிப்பதும்!"

"சமதர்மம் உதயமானாலல்லவா பாதிப்பதற்கு?"

"என்ன, அப்படிச் சொல்கிறீர்களே? — நிச்சயம் உதயமாகும்."

"உதயமுமாகாது; அஸ்தமனமுமாகாது!"

"காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாய்த் தோன்றுவது போலத் தங்களுக்கு எல்லோரும தங்களைப் போலவே சுயநல வாதிகளாகத் தோன்றுகிறார்கள்!"

"ஜனநாயகத்தின் தத்துவம் தெரியாமல் பேசுகிறீர்கள். எல்லோரும் எழுத்தறிவு பெற்றவர்களாயிருக்கும் நாட்டிலேயே ஜனநாயகம் வெற்றி பெற முடியவில்லை. நம் நாட்டிலோ கேட்கவே வேண்டாம். இங்கே அது நிச்சயம் 'எடுப்பார் கைப்பிள்ளை' யாகத்தான் இருக்கும். அதனால் குறிப்பிட்ட ஒரு கூட்டம் தின்று கொழுக்க முடியுமே தவிர ஜனங்கள் எந்தவிதமான நன்மையும் அடைய மாட்டார்கள்."

"நீங்கள் நம் தலைவர்களைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்........"

"இல்லை, இல்லை, நீங்கள் தான் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உண்மையைச் சொல்லப் போனால் நம்முடைய தலைவர்கள் ஜனத் தலைவர்களே யல்ல, அவர்களில் பெரும்பாலோர் பிறவித் தலைவர்கள். பரம்பரை பரம்பரையாகப் பணத்தில் ஊறித் திளைத்தவர்கள். சுகபோகத்தின் எல்லையையும் இறுதியையும் கண்டவர்கள். அவர்களுக்கும் ஜனங்களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது—கை தட்டுவதைத் தவிர!"

"என்ன! நீங்கள் மகாத்மா காந்தியைக் கூடவா அப்படிப் பட்டவர் என்று சொல்கிறீர்கள்?"

"இல்லை; அவர் வேண்டுமானால் மேற்கூறியவர்களுக்கு விதிவிலக்கா யிருக்கலாம். ஆனால் அவரை அரசியல் தலைவர் என்று எப்படிச் சொல்ல முடியும்? அவர் அரசியல் சந்நியாசி!"

"இருக்கட்டுமே! அரசியல் தலைவரால் சாதிக்க முடியாத காரியத்தை அரசியல் சந்நியாசியால் சாதிக்க முடியும் என்று நான் சொல்கிறேன்..."

"சொல்லுங்கள், சொல்லுங்கள்! நான் மட்டும் சொல்வதற்குத் தயாராயில்லை. ஏனெனில் அவர் அஹிம்ஸாவாதி......"

"அஹிம்ஸை வெற்றியடைய முடியாது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? நம் கண் முன்னாலேயே அது எத்தனையோ வெற்றிகளை அளித்திருக்கிறதே!"

"ஆமாம், மகாத்மா காந்திக்கு முன்னால் இயேசுவும் புத்தரும் கூட அஹிம்ஸையில் வெற்றி யடைந்திருக்கிறார்கள் ஆனால் அவர்களுடைய வெற்றி ஆரம்ப வெற்றியாய்த்தான் இருந்திருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது!"

"ஏன், இன்றளவும் அவர்களுடைய பெயர் நிலைத்திருக்கிறதே!'

"பெயர் நிலைத்திருக்கிறது; கொள்கைதான் நிலைத்திருக்கவில்லை!"

"அதற்கு அவர்கள் என்ன செய்வார்கள்? ஜனங்கள் அவர்களைக் கடவுள்களாக்கி விட்டதோடு நின்று விட்டார்கள்!"

"அதையேதான் நானும் சொல்கிறேன். மகாத்மா காந்தியையும் இன்னும் கொஞ்ச நாட்களுக்கெல்லாம் நம்முடைய ஜனங்கள் கடவுள்களுடைய ஜாபிதாவில் சேர்த்துவிட்டுத் திருப்தியடைந்து விடுவார்கள்! தங்களுடைய சொந்த வாழ்க்கை கூட அவர்களுக்கு அவ்வளவு முக்கியமல்ல; கடவுள்கள் தான் முக்கியம்!"

இந்தச் சமயத்தில் சாந்தினி குறுக்கிட்டு 'நம்மவர்கள் தான் இந்த உலகத்தில் சௌகரியமாக வாழ்வதற்கே ஆசைப்படுவதில்லையே! மரணத்திற்குப் பிறகு மோட்ச சாம்ராஜ்யத்திற்குச் சென்று அங்கே சௌகரியமாக வாழ்வதற்கு அல்லவா விரும்புகிறார்கள்!" என்றாள்.

"இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றால் அதற்காக அவர்கள் அனுவசியமாகக் காத்துக் கொண்டிருப்பது தான்!" என்றார் பரந்தாமன்.

"காத்துக் கொண்டிராமல் என்ன செய்வது?" என்று கேட்டேன் நான்.

"எவ்வளவு பெரிய கடலைக் கடவுள் அவர்களுக்காக அளித்திருக்கிறார்! அதை உபயோகித்துக் கொண்டால் ஒரு நிமிஷத்தில் மோட்ச சாம்ராஜ்யத்தை அடைந்து விடலாமே!" என்றார் பரந்தாமன்.

சாந்தினியும் நானும சிரித்தோம்.

அதற்குப் பிறகு, "நீங்களும் நானும் பேசிக்கொள்வதற்குத்தான் இன்னும் எத்தனையோ நாட்கள் இருக்கிறதே! இப்பொழுது நீங்கள் சாந்தினியுடன் பேசுவதற்கு நான் ஏன் குறுக்கே நிற்க வேண்டும்?—போகிறேன்!" என்று சொல்லி விட்டு நான் அப்பால் நகர்ந்தேன்.

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் சாந்தினி என்னைப் பார்ப்பதற்காக இவ்வளவு தூரம் வந்திருக்கிறாள் என்று நினைப்பதுபோலல்லவா இருக்கிறது"! என்றார் பரந்தாமன்.

"பின் யாரைப் பார்க்க வந்திருக்கிறாள்?" என்றேன் நான், ஒன்றும் தெரியாதவனைப் போல.

"இருவரையும், பார்க்கத்தான் வந்தேன்!" என்று சொல்லிச் சாந்தினி நிலைமையைச் சமாளிக்கப் பார்த்தாள்.

"பொய், உங்களைப் பார்க்கத்தான் வந்திருக்கிறாள்!" என்றார் பரந்தாமன்.

"இல்லவே யில்லை; தன்னுடைய அருமை அப்பாவைப் பார்த்துவிட்டுப் போவதற்காகத்தான் வந்திருக்கிறாள்" என்றேன் நான்.

"அவள் அந்தவயதைக்கடந்து எத்தனையோ வருஷங்கள் ஆகிவிட்டன......" என்று பரந்தாமன் ஆரம்பித்தார். நான் குறுக்கிட்டு, "எந்த வயதைக் கடந்து?" என்று கேட்டேன்.

"அப்பாவிடம் அன்பு செலுத்தும் வயதைக் கடந்துதான்!" என்றார்.

"இப்பொழுது யாரிடம் அன்பு செலுத்துகிறேன், அப்பா! கணவனிடமா அன்பு செலுத்துகிறேன்?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் சாந்தினி.

"ஆமாம்!" என்றார் பரந்தாமன்.

"நல்ல கூத்துத்தான்! இன்னும் கொஞ்சநாட்கள்போனால் குழந்தையிடம் அன்பு செலுத்துகிறேன் என்று கூடச் சொல்லிவிடுவீர்கள் போலிருக்கிறதே!"

"நம் தமிழ்நாட்டுப் பெண்களின் லட்சணமே அதுதானே! அப்பாவை நம்பி வளரவேண்டியது; அகமுடையானை நம்பி வாழவேண்டியது; பிள்ளையை நம்பிச்சாகவேண்டியது! மற்றபடி அவள் தன்னைத்தானே நம்பி வாழ்வதற்குத்தான் நம் சமுதாயம் அனுமதிப்பது கிடையாதே!" என்றேன் நான்.

"சாந்தினியும் அப்படித்தான்! அவள் இதுவரை என்னை நம்பி வளர்ந்துவிட்டாள்; இனிமேல் வாழ்வதற்கு உங்களை நம்பிக்கொண்டிருக்கிறாள்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் பரந்தாமன்.

"போ, அப்பா?" என்றாள் சாந்தினி.

"இன்னும் எத்தனை நாட்களானாலும் நான் என்னவோ உன்னைவிட்டுப் போகப் போவதில்லை; நீதான் என்னைவிட்டுப் போகவேண்டும்" என்றார் பரந்தாமன்.

"இது என்ன, அப்பா! எப்பொழுது எந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவது என்று தெரியாமலே பேசுகிறீர்களே?"

"ஓஹோ! உன்னுடைய கல்யாண விஷயத்தைப் பற்றி உனக்குத் தெரியாமல் பேச வேண்டும் என்கிருயா?—அதாவது, எனக்குத் தெரியாமல் நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் காதலித்ததைப் போல..........."

"அப்பா! நீங்கள் இந்த மாதிரியே பேசிக்கொண்டு போனுல் நான் இந்த இடத்தை விட்டு இப்பொழுதே போய் விடுவேன்!"

"நீ மட்டுமா? இவரையும் அழைத்துக்கொண்டா?" என்று என்னைச் சுட்டிக்காட்டினுர் பரந்தாமன். எனக்குச் சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்துவிட்டது; சிரித்து விட்டேன்.

சாந்தினி சிரிக்கவில்லை; ஆனுல் அவளுடைய உள்ளம் சிரித்தது! அந்தச் சிரிப்பின் சாயை அவளுடைய முகத்திலும் பிரதிபலித்தது!

அவள் நாணிக் கண்புதைத்தாள்!

அவளுடைய தோளின்மீது லேசாகக் கை வைத்து, "அவசரப்படாதே. அம்மா! இந்தத் தடவை சந்திரமோகன் சிறையிலிருந்து வெளியே வந்ததும் நான் முதன் முதலாகச் செய்யப்போகும் காரியம் உன்னுடைய கல்யாணந்தான்!" என்று சொல்லி, பரந்தாமன் மேலும் அவளைக் கிண்டினுர்.

"அப்பா! நான் அழுவேன்!" என்று அவள் அவரைப் பயமுறுத்தினுள்.

"துக்கத்தினுல்தான் உலகத்தில் பெண்கள் அழுகிறுர்கள் என்பதில்லை; ஆனந்தத்தினுலும் அவர்கள் அழுவதுண்டு!" என்றுர் பரந்தாமன்.

"நான் சாந்தினிக்காகப் பேச்சை மாற்ற எண்ணி, இம்முறை விடுதலையடைந்ததும் நான் முதன் முதலாகச் செய்யப் போகும் காரியம் என்ன தெரியுமா......?" என்று ஆரம்பித்தேன். பரந்தாமன் இடைமறித்து, "தெரியும்; சாந்தினியைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்!" என்றுர்.

"இல்லை; ஏதாவது ஒரு கிராமத்துக்குச் சென்று தொண்டுசெய்யப்போகிறேன்!" என்றேன் நான்.

"தனியாகவா?"

"ஆமாம்."

"ஏன், இருவரும் சேர்ந்தே செய்யலாமே!"

"அது சாத்தியம் என்று எனக்குத் தோன்றவில்லை!"

"ஏன் சாத்தியமில்லை?"

"ஒருவர்மீது ஒருவர் அன்பு செலுத்துவதற்கே எங்களுக்குப் பொழுது சரியாயிருக்கும். அப்புறம் நாங்கள் எங்கே மற்றவர்கள் மீது அன்பு செலுத்துவது?" என்றேன் நான், சாந்தினியைக் கடைக்கண்ணுல் பார்த்துக்கொண்டே.

"ஏன், கஸ்தூரிபா காந்தி, கமலா நேரு போன்றவர்கள் சேர்ந்தே தொண்டாற்றவில்லையா?"

"அவர்களுடைய விஷயம் வேறு; நம்முடைய விஷயம் வேறு. அவர்களுக்கு வயிற்றைப் பற்றிக் கவலையில்லை. நமக்கு அப்படியில்லையே! நாம்

தேசத் தொண்டோடு வயிற்றுத் தொண்டையும் சேர்த்து அல்லவா செய்யவேண்டியிருக்கிறது!'' என்றேன் நான்.

''இரண்டையும் சேர்த்துச் செய்வதில் எனக்கு ஒன்றும் கஷ்டம் இருப்பதாகத் தெரியவில்லை!'' என்ருர் பரந்தாமன்.

''தங்களுக்குக் கஷ்டம் இராதுதான்! ஏனெனில் தங்களுடைய தேசபக்தியே அலாதியான விஷயம்!'' என்றேன் நான்.

''நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. தேசபக்தன் கல்யாணம் செய்து கொண்டால் அவன் பந்தத்துக்கும் பாசத்துக்கும் கட்டுப்பட்டவனுகி விடுவான்; அதனுல் அவன் சுயநலவாதியாக நேரும். அப்புறம் அவன் ஒழுக்கத்தைக் காப்பாற்றிக் கொள்வதும் அபூர்வம என்கிறீர்கள்—அப்படித்தானே?''

''ஆமாம்''

''இது விஷயத்திலும் நீங்கள் தவருன அபிப்பிராயம் கொண்டிருக்கிறீர்கள். உலகத்தில் சுயநலத்துக்கு ஓரளவு கட்டுப்படாத மனிதன் எவனுமே கிடையாது.விளம்பரவாழ்க்கையில் வேண்டுமானுல் அவன் உங்களுடைய பக்திக் கண்களுக்குச் சுயநலமற்றவனுகத் தோன்றலாம். நிஜவாழ்க்கையில் நீங்கள் அவனை நெருங்கிப் பார்த்தால் அவனிடத்திலும் சுயநலத்தை காண்பீர்கள்!''

''மற்றவர்கள் எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். நம்மைப் பெறுத்தவரை நாம் ஒழுங்காக இருந்துவிட்டுப் போவோமே!''

''மண வாழ்கையிலும் அந்த ஒழுங்கு சாத்தியமே. அதற்கு உதாரணமாக நாம் மணவாளனையும் பரிமளாவையும் எடுத்துக்கொண்டாலே போதும்!''

''போதுமே! தேசபக்தராயிருந்த மணவாளன் கல்யாணமானதும் மனைவி பக்தராக மாறிவிட்டார் அல்லவா?'' என்றேன் நான்.

''அவர் உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதற்காக நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள். இதற்குக் காரணம் சிறைக்குப் போவதுதான் தேசத் தொண்டு என்று நீங்கள் தவருக நினைத்துக் கொண்டிருப்பதே!''



வக்கீல்: இந்த வழக்கில் நமது பக்கம் தீர்ப்பானதால் உமக்கு மிச்சமாகும் பணம் இருக்கிறது பாரும்! அதை என்ன செய்யப் போகிறீர்?

கட்சிக்காரர்: என் மகனை வக்கிலுக்குப் படிக்கவைக்கப் போறேனுங்க!

"நான் தவருக நினைத்துக் கொண்டிருக்கவில்லை; உண்மையும் அதுதான்''

"உண்மை உங்களுக்குத் தெரியவில்லை; எனக்குத் தெரியும். நான் அவர்களைப் பார்த்தேன்!''

"எப்பொழுது பார்த்தீர்கள்?''

"தஞ்சைக்குச் சென்றிருந்தபோது பார்த்தேன். பரிமளா எவ்வளவு தூரம் விஷயம் தெரிந்தவள் என்பதை என்னல் அப்பொழுதுதான் புரிந்துகொள்ள முடிந்தது. அவர்கள் இருவரும் சேர்ந்து அந்தக் கிராமத்தில் அக்கம்பக்கம் தெரியாமல் தொண்டு செய்து வருகிருர்கள். ஹரிஜனங்களுக்கு அவர்கள் கோயிலைத் திறந்துவிடவில்லை; அதற்குப் பதிலாகத் தங்கள் வீட்டைத் திறந்து அதில் ஒரு பக்கத்தில் அவர்களைக் குடியிருக்கச் செய்திருக்கிருர்கள். தங்களுக்குச் சொந்தமாயிருந்த நிலத்தில் பெரும் பகுதியைத் தங்களிடம் வேலை செய்து வந்த விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கிருர்கள். தங்களால் இயன்றவரை அங்குள்ளவர்கள் எழுத்தறிவு பெறவும் வழிகாட்டி யிருக்கிருர்கள்...........''

"அதாவது, காந்தி மகானின் நிர்மாணத் திட்டத்தை.........?''

"இல்லை, இல்லை; காந்தி மகானின் நிர்மாணத் திட்டத்தைப் பரிமளா 'கட்டைவண்டிப் பிரயாணம்' என்கிருள். மனிதன் ஆகாய விமானத்தில் பறக்கும் இந்த நாளில் அது வெறும் கேலிக் கூத்து என்பது அவள் அபிப்பிராயம்!''

"என்ன!''

"ஆமாம், 'சுயராஜ்யம், சுயராஜ்யம்' என்று நாம் அடித்துக்கொள்கிருேமே, அந்தவிஷயத்தில்கூட அவளுடைய அபிப்பிராயம் மாறுபடுகிறது. சுயராஜ்யம் என்பது வெறும் அதிகார மாற்றமாயிருக்கும் என்றுதான் அவள் நினைக்கிருள். 'ஒடுக்கப்பட்ட — ஏன் ஒதுக்கப்பட்ட மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்று விரும்புபவன் சட்டத்தை மீற வேண்டுமென்ற அவசியம் இல்லை; சட்டத்தை மீருமலே அவன் தொண்டு செய்யலாம். புரட்சி, சட்டத்தில் வேண்டியதில்லை; மனத்தில் வேண்டும் என்பது அவள் கட்சி. அந்தக் கட்சியில் மணவாளன் சேர்ந்துவிட்டான்; சேர்க்கப்பட்டுவிட்டான்!'' என்று பரந்தாமன் உணர்ச்சி ததும்பச் சொல்லி முடித்ததும், "அப்பா! ஒரு மாத காலம் நான் பரிமளாவுடன் போய் இருந்துவிட்டு வரட்டுமா, அப்பா!'' என்ருள் சாந்தினி.

"கட்டாயம் போ, அம்மா! நீ அவசியம் அவளைப் பார்க்க வேண்டும் அவளிடம் நீ தெரிந்துகொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது!'' என்ருர் பரந்தாமன்.

அதற்குப் பிறகு சிறிது நேரம் குடும்ப விவகாரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, சாந்தினி எங்களிடம் விடைபெற்றுச் சென்ருள்.

(தொடரும்)

உயர்ந்த உல்லாசம் அவர்கட்கு

8. சென்ட்ரல்பார்க் கந்தப்பண்டாரம்

காலைமணி எட்டு இருக்கும். கால் கடுக்க எங்கெல்லாமோ சுற்றிவிட்டுச் சென்ட்ரல் பார்க்குக்குள்ளே நுழைந்தேன். காலையில் வந்த செய்தித்தாள்களில் சிறிது நேரம் கண்களை ஏவிவிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

பார்க்கின் ஒரு மூலையில் கொம்பிழந்த பிள்ளையாருக்காக வளர்க்கப்பட்டிருக்கும் அரச மரத்துச் சல்லடைக் கண் நிழலிலே அவன் காலை நீட்டிக் கைகளை முறித்துக் கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் பல்லைக் காட்டி, "வாங்கஐயா" என்று வரவேற்ருன்.

"இரவு ஒரு அதிசயமான சம்பவம் நடந்தது. எனக்கே அது ஆச்சரியமாயிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே என் முகத்தைப் பார்த்தான். நானும் ஒரு ஆச்சரியக் குறி போட்டு "என்ன அது; அப்படிப்பட்ட அற்புதம்?" என்று கேட்டுக் கொண்டே புல் விரித்த தரையில் உட்கார்ந்தேன்.

"எனக்கு இப்படிப்பட்ட அதிர்ஷ்டம் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை"

"விஷயத்தைச் சொல்லப்பா"

"சரி, இதோ கேளுங்கள். அழகான மாளிகை, வயிரமணிகள் இழைத்த தூண்களால் நிறுத்தப்பட்டிருக்கிறது. பளிங்குத் தரைகள் பளபளவென்று, உருக்கிவிட்ட தங்கத்தைப் போல ஜொலிக்கின்றன. அங்கே.........

"அறுசுவையோடு கூடிய உணவை அருந்திக் கொண்டிருக்கிறேன். என்னைச் சுற்றி அதிரூப சுந்தரவல்லிகள் பலர் நின்று கொண்டு அன்னத்தின் தூவியாலான வெண்சாமரம் கொண்டு வீசுகிருர்கள் இலையிலே நெய் ஓடுகிறது. விதவிதமான உணவுகள், நான் கேட்குமுன்னர் வந்து குவிந்து கொண்டே இருக்கின்றன. விலாப்புடைக்க அத்தனையும் தின்று தீர்த்தேன். பல நாள் பசியோடிருந்த யானையின் கண்களுக்குக் கரும்புத் தோட்டம் தென்பட்டால் வாயை மூடிக் கொண்டா போகும்?

"என் வாழ்நாளிலேயே அத்தனைய அறுசுவை உணவு உண்டதில்லை. விருந்து முடிந்தது. கைகளைக் கழுவுவதற்காக எழுந்தேன். பவளவாய்ப் பாவையொருத்தி பக்கத்தில் நின்று கொண்டு பன்னீரை ஊற்றினுள் என் கைகளுக்கு. பிறகு இரண்டு மங்கையர் என் தோள்களைத் தாங்கிய வண்ணம் என்னை மஞ்சத்துக்கு அழைத்துச் சென்றனர். என் உடைகளை ஒருதரம் பார்த்தேன். அடடா! அத்தனையும் பட்டு! தங்கச் சரிகைகள்!

"எனக்குத் தெரியாமல் வந்த இந்தக் குருட்டு யோகத்தைப் பற்றி நானே எனக்குள் பேசிக் கொண்டேன். 'நமக்கு அதிர்ஷ

டமே இல்லை யென்று சொன்னுனே சோமுப்பண்டாரம், அவனுக்குச் சரியான புத்தி புகட்டவேண்டும்' என்று.

''மஞ்சத்தில் படுத்தேன். கால்களைப் பிடிக்க நான்குபேர். கைகளை அமுக்கிவிட இரண்டு பேர். விசிறி வீச ஓர் ஆள். அத்தனை பேரும் பெண்கள். பெண்களென்ருல் பொக்கைவாய்க் கிழவிகளல்ல, மணமாகாத கன்னியர்.

''சவ்வாதுப் பத்தியின் 'ஜம்' மென்ற வாடை! பக்கத்தில் நின்று பணிவிடை செய்யும் பாவைகளின் உபசாரம். ஏகப்பட்ட விருந்து வகைகளை உள்ளே தள்ளியதால் உண்டான மயக்கம்! இவைகளுக்கிடையில் நான் நன்ருகத் தூங்கிவிட்டேன்''.

ஃ ஃ ஃ

''வயிற்றை வலிப்பது போல் தோன்றியது?''

''விருந்திலே விஷத்தை வைத்து விட்டார்களோ, பாவிகள்'' என்றேன்.

''விஷமா? அந்த அமுதவல்லிகள் அப்படிப்பட்ட கொடியவர்களல்ல. வயிற்றிலே வலி வந்ததற்குக் காரணம் அஜீர்ணம்! கண்களைத் திறந்தேன்......''

''மருந்து கொண்டு வந்து கொடுத்தார்களா அந்த மங்கைகள்'' என்றேன்.

''மருந்தாவது! மண்ணுங்கட்டியாவது! விழித்துப் பார்த்தால் மாளிகையையும் காணேம் மஞ்சத்தையும் காணேம். அத்தனையும் கனவு''

''பூ! வெறும் கனவுதானு?''

''கனவாவது பரவாயில்லையே! கண்ணைத் திறந்து பார்த்தால் பார்க் சேவகன் கருப்பையா, கையிலிருந்த விளக்குமாற்றைக் கொண்டு வெண்சாமரம் வீசிக் கொண்டிருந்தான்'' என்று தன் ஆனந்தக் கனவையும் அதன் அற்புத முடிவையும் கூறினுன். அவன் தான் கந்தப் பண்டாரம்.

கனவுலகத்திலே, கந்த மூலாதிகளை ஒதுக்கிவிட்டுக் கனி பணியாரங்களைக் கட்டழகியரோடு, இன்று மட்டுமல்ல, எத்தனையோ நாட்கள் இவன் உண்டிருக்கிருன். ஆகவே இது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்க வில்லை. ஆனுல்......

காதல் என்ற கோபுரத்தில் ஏறும் போது கால்தவறிக் கீழே விழுந்து விட்டதால் வாழ்க்கை சுக்கு நூருகச் சிதறிக் காவியுடையையும், 'காதறுந்த ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்ற உபதேசத்தையும் பரிசாகப் பெற்ற கந்தப் பண்டாரத்தின், ஏழ்மைநிலை கண்டு என் நெஞ்சு இளகியது. இரக்கம் உண்டாகியது. இரக்கம் இருந்து என்ன பயன்? பணமும் இரக்கமும் பாம்பும் கீரியு மாயிற்றே!

அவனுடைய வாழ்க்கை தூள் தூளாகச் சிதறியதற்குக் காரணம் சுயநலக் கூட்டத்தார் தங்கள் சொந்த நலனுக்காக உண்டாக்கி வைத்திருக்கும் இரக்கமற்ற சமுதாயம் அவன்மேல் விட்டெறிந்த கல்தான். கொடுஞ்சித்தமென்னும் பாம்பை அவன்மேல் ஏவினர். 'கார்க்கோடகனைப்' போல அது கந்தப் பண்டாரத்திற்குக் காவியுடை தந்தது.

உயர் மாடிகளிலே உலவிக் கொண்டிருக்கும் உல்லாசங்க

ளுக்குக் கந்தப் பண்டாரங்களைத் தெரியாது. அவர்களைக் கனவில்கூடக் கண்டிருக்கமாட்டார்கள். (அந்தக் கசடர்களைப்பற்றி நாம் பேசுவானேன்!) இதோ கந்தப் பண்டாரத்தைப் பாருங்கள்!

மதுரை சென்ட்ரல் பார்க் தான் அவனுக்கு வீடு, வாசல் தோட்டம், துரவு எல்லாம். அவனுடைய சொத்து வரலாறு மிகவும் சுருக்கம்தான். ஒரே ஒரு மண்ணோடு — அது தான் அவனது இரும்புப் பெட்டியும் சோறு வாங்கும் கோப்பையுமாகும்! ஒரு பழைய துணி மூட்டை—இரவு, இலவம் பஞ்சு மெத்தைக்கு (புல் தரைதான்) தலையணையும் அது தான். தோளிலே ஒரு துண்டு. காவிநிறம்! இடுப்பிலே எப்போதாவது சுருட்டு(ம்) கம்பெனியார் தானம் செய்த வேட்டி. கையிலே கஞ்சாக்குழல்! மடியிலே பொட்டணம்! தாடியும் மீசையும் அறுவடை செய்யப் படாத முகம்! கழுத்திலே உருத்திராட்ச மாலைகள்! — இவைதான் கந்தப்பண்டாரம்!

காலை வெயில் கன்னத்தைப் பிய்த்துக் கொண்டிருந்தது! 'முருகா' என்று முனகிக் கொண்டே விருந்து உண்ட தனது வயிற்றைத் தடவிப் பார்த்தார்! அது ஒட்டி, உலர்ந்துபோய்,பின் முதுகைத் தொட்டுக்கொண்டிருந்தது.

மடியிலிருந்து கஞ்சாவை எடுத்து உருட்ட ஆரம்பித்தார். நான் சற்று விலகி உட்கார்ந்துகொண்டேன். அப்பொழுதுதான் காலை உணவுக்காகக் காவடி எடுத்துப்போயிருந்த சாத்தப் பண்டாரம் வந்தார்.

"சாமிகள், சாதத்திற்கு இன்னும் புறப்படவில்லைபோலிருக்கிறது" என்றார் சாத்தப் பண்டாரம்.

"நாம் என்ன, காகமா, சேவலா, காலை மலர்ந்தவுடன் வீடு வீடாகச் சென்று கரைந்துகொண்டிருக்க" என்று பதில் கூறிக்கொண்டே, கஞ்சாத்தூளைக் குழாயில் சொருகினார்.

"நாம் கரைந்துகொண்டு செல்லாவிட்டால் இந்தக் கட்டை கரைந்துவிடுமென்று சாமிகளுக்குத் தெரியாதா?" என்று நகைச்சுவை வெடியைச் சுட்டுத் தள்ளினார் 'சா'வன்னாப் பண்டாரம்.

கந்தப் பண்டாரம் லேசாகச் சிரித்துக் கொண்டே, தீப்பெட்டியை எடுத்து, கஞ்சாக் குழாய்க்குக் கொள்ளிவைத்தார். பிறகு மூச்சை உள்ளடக்கி, மூவாயிரம் நரம்புகளையும் இழுத்துப் பிடித்து ஒரு 'தம்' பிடித்தார்.

"இந்தக் கட்டைக்கு இதுவே கற்பகமரம்!" என்றார் புகையை விட்டுக்கொண்டே! சாத்தப் பண்டாரம் சாதக் கடைடைப் பரப்பி, அதை வேட்டையாட ஆரம்பித்தார்.

சாத்தப்பண்டாரம் சாப்பிட்டானதும் தனது கைகளை மேல் துண்டினால் துடைத்து விட்டு, பயபக்தியோடு குனிந்து தனது கைகளைத் தாழ்த்திக் கந்தப் பண்டாரத்தின் முன் நீட்டினார். ஒரு பெரிய தனவந்தன் தங்கப் புதையலைத் தானம்செய்வதுபோல,'கானாப்' பண்டாரம் 'சாவன்னாப்' பண்டாரத்திடம் கஞ்சாக்குழாயைக் கொடுத்தார். அவர் மீதியிருந்ததை ஊதித் தள்ளினார்.



"பஜனைக்குப் போகவேண்டாமா?"

"அதற்குள்ளாகவா?"

"பத்தாகிறதே, மணி!"

"சரி, சாமிகளே, நீங்கள் முதலில் போங்கள், நான் பின்னால் வருகிறேன்" என்று சா(த்)தப் பண்டாரத்தை அனுப்பிவிட்டுச், சோத்துக் கடைச் சுப்பியிடம் சென்றார் கந்தப்பண்டாரம்.

சோத்துக் கடைச் சுப்பியை உங்களுக்குத் தெரியாதா? சரியாய்ப் போச்சு!

பார்க்கைச் சுற்றிக் கம்பியினால் கிராதி யெடுத்திருக்கிறார்கள். பார்க்கின் மேற்கு மூலையில் ஒரு பாதாளக் கக்கூஸ் இருக்கிறது. அதிலிருந்து இளம்பும் 'சுகந்த மண்டலத்தின்' பரப்பில், ஒரு ஓரத்தில்தான் உணவு விடுதிகள் பலதிறக்கப் பட்டிருக்கின்றன. அவைகள் எப்போதும் திறந்தபடிதான் இருக்கும். நமது காருண்ய கவர்ண்மெண்டார் அதற்கு இனாம் லைசென்ஸ் வழங்கியிருக்கிறார்கள் போலும்! அதனால்தான் அவைகள் ரஸ்தாவின் மேலேயே, கட்டடம் இல்லாக் கடைகளாக விளங்குகின்றன! ஆனாலும் அவ்வப்போது வரும் சிவப்புத்தொப்பிகளில் ஏதாவது சில்லறைகள் விழத்தான் செய்யும்!

இந்தக் கடைகளிலேயே, பெரிய கடைக்காரி, அதாவது அதிக மூலதனம் போட்டவள் தான் சுப்பி. சோற்றுக்கடைச் சங்கத் தலைவி. ஒரு கோப்பை (கப்) சாதம் இரண்டணா என்று விலை நிர்ணயம் (கண்ட்ரோல்) செய்தவள். ஒவ்வொரு பண்

டாரத்தின் சுய சரிதமும் அவ ளுக்குத் தெரியும்! வயது 57.

"என்ன சாமி, சாதம் எடுத்து வைக்கட்டுமா?" என்று கேட்டாள் எதிரில் நின்ற 'க' பண்டாரத்தை நோக்கி! கந்தப் பண்டாரம் முடிச்சை அவிழ்த்து இரண் டணவை எடுத்துக் கொடுத் தார். உணவை முடித்துக் கொண்டு தனது ஆஸ்தான மண்டபத்திற்கு வந்தார். கொட்டாவி அவர் வாயைப் பிளந்துகொண்டு வந்தது. "குகா! குகா!" என்று மூன்று முறை கூவினர். பிறகு ஒரு தோலா அபினே எடுத்து உள்ளே இறக்குமதி செய்து விட்டுக் கால்களை நீட்டினர்; கண்ணயர்ந்தார்!

கஞ்சா! அபின்!— அவனு டைய இரண்டு கண்கள்! கண் ணிழந்த குருடனுவது கோலின் துணைகொண்டு வாழ முடியும்! இவனுக்கு அப்படியும் முடி யாது. இரண்டிலே ஒன்று இல்லையாயினும் அவனுக்கு இந்த உலகம் இல்லை!

அவனுடைய போதை நிலை யிலே இந்த உலகத்தின் வாதையை மறந்துவிடுகிருன். சோகத்தைத் துரத்தியடிக்கி ருன்! ஏதோ அவனுடைய அறிவுக்கே எட்டாத இன் பத்தை அணைத்துக்கொண்டு வாழ்வை வதைக்கும் உயர் குலச் சிமான்களின் உள்ளம் எப்படி உணர்ச்சியற்ற மரக் கட்டையாக இருக்கிறதோ அப்படித் தன் உடலைக் கிடத் திக்கொண்டு, உறங்குகின்ருன்.

காலையில் எழுந்ததும் தனது கருகிய வயிற்றுக்குக் கஞ்சி வார்க்க, கலப்பையை எடுத் துக் கொண்டு, ஈரமில்லாத நிலத்தை உழுகின்ற உழவன் போல, உலோபித்தனம் பெற்றுவிட்ட உல்லாசர்களின் வீடுதோறும் சென்று உரக்கப் பாடுவான். அதிலே ஏழ்மை எதிரொலிக்கும்! சோகபாவம் சொட்டும்! கிடைக்கும் சில்ல றைகளில், கஞ்சாவுக்கும் அபி னுக்கும் போக, மீதி சுப்பியின் மடியைச் சேரும்!

கந்தப்பண்டாரங்கள் நாட் டிலே எத்தனையோ பேர்! எல் லோரும் வாழ்க்கையை அமைக்க, அஸ்திவாரம் தோண்டும் பொழுது, அதிலே வழுக்கி விழுந்தவர்கள் தாம். அவர்கள் ஏழைகள்! நாடோடி கள்! உலகம், அவர்களை ஒதுக்குகின்றது! சமுதாயம் அவர்களைச் சாவின் திசை நோக்கி, விரட்டுகிறது!

தொழில் தரலாம்! துயர் துடைக்கலாம்! ஒடிந்துபோன இவர்களின் வாழ்க்கையை நேர் நிறுத்தலாம்! கசந்து போன இவர்கள் வாழ்க்கையில் கரும் பின் ருசியை ஏற்றலாம்—சர்க் கார் முயற்சித்தால்! ஆனுல், உளுத்துப் போன கொள்கை களைப் பிடித்துக் கொண்டிருக் கும்சர்க்கார் இதனைக் கனவிலா வது கருதுமா? உல்லாசங்கள் தாம் இதனை உற்றுப் பார்ப் பார்களா?

அதோ கந்தப்பண்டாரம்! கொலையுலகம் வகுத்துவைத்த சமூகத்தின் கோரப்பற்களிலே சிக்கிச் சிதைக்கப்பட்ட உரு வம்! அவனுக்குக் கனவுதான் இன்பவாழ்வு தருகின்றது!

சிந்தனையைக் கலைத்துக் கொண்டு, பார்க்கைவிட்டு வெளியேறினேன்.

வணக்கம்,
வழிப்போக்கன்.



இரத்த வேட்கை

— தே. நாராயணன் —

குசிநாகரத்தின் வீதிகளெல்லாம் என்றுமில்லாததொரு சோபையுடன் விளங்கின. வீதியை அழகு செய்யக் குறுக்கும் நெடுக்குமாக மாவிலைத் தோரணங்கள்; மாக்கோலமிட்ட வாயில்கள்; வீதியில் இடையிடையே நடப்பட்ட வாழைகள்; அதைப் பிடித்திழுக்கும் சிறுர் கூட்டம்; அவர்களைத் தடுக்க விரையும் அணி பூண்ட அணங்குகள்!—என்ன கோலாகலம்! அதோ தெரிகிறதே, அதுதான் குசிநாகரத்தின் ராஜபாட்டை! அப்பப்பா! அங்கு என்ன மக்கட்பெருக்கமய்யா! தெருவெல்லாம் வழிந்தோடுகின்றனரே! ஆம்! தேர் புறப்பட்டுவிட்டது, அதைத் தொடர்ந்து குசிநாகரப் பக்த கோடிகள் வான் பிளக்கச் சப்தமிட்டு வந்தனர். குசிநாகரத்தின் முக்கால் பங்கினர் அந்தப் பக்தி சிரத்தையில் மூழ்கியிருந்தனர்.

ஆனல்.........! குசிநாகரத்தின் ராஜபாட்டையில் வான் முகட்டைத் தொடும்படி உயர்ந்துள்ள மச்சுவீடு ஒன்றில் இரண்டு உருவங்கள் மட்டும் ஏதேதோ பேசுகின்றன.

“ஆர்ய புத்ரா! அதோ பார், பக்திபோதை ஏறிய குசிநாகர வாசிகளை! பட்டாச்சாரியின் கைவரிசையை இப்போதாவது புரிந்துகொண்டாயா?”

“குருதேவ்! இதே நிலை, நாளை வரை குசிநாகரவாசிகளிடம் நீடிக்குமென்பதற்கு என்ன உறுதியிருக்கிறது?”

“ஆர்யா! புத்தனின் மெய் விளக்கம் மக்களின் பக்தி போதையைத் தெளிய வைத்து விடும் என்றுதானே பயப்படுகிருய்? பாவம் நீ என்னசெய்வாய்; பிள்ளைப் பிராயந்தானே! நம் இனம் வந்தபின் காக்கும் இனமல்லடா; வருமுன்பே அணை போட்டுவிடும்! பட்டாச்சாரியின் வெற்றி தோல்வியில் இருக்கிறது, பிராமணீயத்தின் வாழ்வும் வீழ்வும்; இதுவரையில் பட்டாச்சாரி தோற்ருன் என்று யாரும் சொன்னதில்லை, சிஷ்யா! பார்ப்போம்”

ஆர்யபுத்திரன் சிறிதுநேரம் சிந்தனையில் மூழ்கினுன்.

“அதோ பார்த்தாயா ஆர்யா! ஊர்வலம் நம் வீட்டை நெருங்கிவிட்டது. தயங்காதே; நாளை ஆயிரமாயிரம் ஆடுகளைப் பலிவாங்கப் போகும் இரத்தவேட்கை பிடித்

துக் கிடக்கும் அம்மனின் ஆயு தத்தை எடுத்துவா; போ!''

''குருதேவா! என் உடல் நடுங்குகிறதே!''

''எல்லாம் நன்மைக்குத்தான் ஆர்யா! நம் முன்னோர்கள் நடுங்கி நடுங்கிச் செய்த காரி யங்கள் தாம் வெற்றிகண்டிருக் கின்றன அப்பா!''

ஆர்யபுத்திரன் தன் குரு பட்டாச்சாரி கூறிய போதனை யைக் கேட்டுக்கொண்டே குசி நாகரத்தின் புரோகிதர்வீட்டை நோக்கி வரும் திருவிழாக்கூட் டத்தைக் கண்டான். அந்தப் பக்தகோடிகளுக்குப் பின்னால் வெறிபிடித்தவர்களைப் போலக் கத்திக்கொண்டு வருபவர்க ளைப் பார்த்ததும் ஆர்யபுத்தி ரன் கலகலத்துப் போனான்.

''குருதேவா! வந்தது ஆபத்து!''

''யாருக்கடா? ஊருக்கு வெளியே தங்கியிருக்கும் புத்த னுக்கா?''

''இல்லை, நமக்கு!''

''ஆர்யா!, அடிக்குப் பயந்து உளருதே!''

''இல்லை குருதேவ்! பலியிடு வதை எதிர்த்துக் குசிநாகர வாசிகளில் சிலர் கோஷமிடுவ தைக் கவனியுங்கள்''

'மதத்தின் பேரால் பலியி டாதே' மீறினால், புத்தன் கழுத்தை முதலில் வெட்டுங் கள்'— என்ற தியாக உணர்வு மிகுந்த சப்தம் பட்டாச்சாரி யின் காதுக்கு எட்டியது. அவன் முகம் கடுகடுத்துவிட் டது. 'நாளைக் காலையில் அம் மன் சன்னதியில் ஆடுகளைப் பலியிடுவதா? அன்றி, ஆடு வெட்டலைத் தடுக்கத் தலை கொடுக்கப் போகும் புத்த னின் சிரந்தன்னைத் துண்டிப் பதா? பின்னதைத் துணிந்து செய்தால் 'பழிச் சொல்' நம்மை வந்தடையுமே! செய் யாது விடுத்தால், இனி குசி நாகரமட்டுமென்ன பாரத வர் ஷத்தில் பார்ப்பனியம் உயி ருடன் வாழவே முடியாதே!' தர்மசங்கடமான நிலையிலிருந் தான் பட்டாச்சாரி. பழிச் சொல், கடமை என்ற இரண் டையும் தனக்குள்ளே மாறி மாறிச் சொல்லிப் பார்த்துக் கொண்டான். பழிச் சொல் லும் கூடாது; கடமையும் செய் தாக வேண்டும். பட்டாச்சாரி மார்பிலே புரளும் பூணூலை உருவிவிட்டுக்கொண்டான். அவனது கருட விழிகள் ஆகா யத்தை வட்டமிட்டன. புருவத் தைச் சுளித்தவாறே, 'புதிய திட்டம் தேவை' என்று முணு முணுத்தான், குசிநாகரத்தின் புரோகிதன் பட்டாச்சாரி. தேரும் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தது. தீர்க்கமான சிந்தனையிலிருந்த குருதேவை, பார்த்தது பார்த்தபடியே நின் றான், ஆர்யபுத்திரன். இது வரையில், கடுகடுத்திருந்த தன் குருதேவின் முகத்தில் புன்னகை மலரக் கண்டதும் ''என்ன குருதேவ்! திட்டம் தோன்றியதா?'' என்று வினவி னான் ஆர்யபுத்திரன்.

''தோன்றியதா என்று கேட் கிறாய்? அது அப்பொழுதே தோன்றிவிட்டதப்பா!''

''எங்கே?''

''இதோ காட்டுகிறேன் பார்! அடி கலாவதி!'' என்று உரத்த குரலில் கூப்பிட்டான் பட்டாச்சாரி. கையில் தண் ணீர்க் குவளையுடன் வந்து நின் றாள் கலாவதி என்ற கடைந்

தெடுத்த தங்கப் பதுமை போன்ருள்!

ஆர்யபுத்திரன் விழிக்க விழிக்கப் பார்த்துக்கொண்டே, "என்ன குருதேவ்! உங்களுக்குப் பைத்தியமா? உங்கள் மருமகளைக் கூப்பிட்டிருக்கிறீர்களே!"—என்று வியப்புடன் கேட்டான்.

"போடா மூடா! உன் குருவுக்கே கெட்ட பெயர் தேடித் தருவாய் போலிருக்கிறதே! இதோ பார், ஆர்யா! நாளை நமது பலிக்கத்தியின் ரத்த தாகம் தணியவேண்டுமானுல், புத்தனின் உடலில் சுண்டிக் கிடக்கும் ரத்தத்தில் சூடேற்றி அவனை முறுக்கேற்ற வேண்டும். அவனது உடலைத் தகிக்க வைக்கவும் தணிக்க வைக்கவும் கலா ஒருத்தியினுல்தான் முடியும். புத்தன் கலா தொடர்பால், புத்தனின் பரிசுத்த தன்மைக்கு ஊனம் விளைவித்து விட்டால், நம்மை அடையவேண்டிய பழிச்சொல் புத்தனைத் தாக்கும்; அதுமட்டுமா? குசிநாகரவாசிகள் அவனைக் கல்லாலும் கட்டையாலும் அடிப்பர். பின்பு...?" என்று முடிக்குமுன், வரட்சியால் அவன் குரல் கரகரத்தது. தன் மருமகள் கலாவின் கையிலிருந்த தண்ணீரைக் குடித்துத் தாகசாந்தியடைந்தான் பட்டாச்சாரி.

"பின்பு என்ன? வீழ்ந்தது புத்தமதம்!" என்று கூவிய வண்ணம் பூஜையிலிருக்கும் பலிக்கத்தியை எடுத்து, வீட்டின்முன் நிற்கும் பக்தகோடிகளிடம் சேர்க்க ஆர்யபுத்திரன் ஓடினுன்.

ஃ ஃ ஃ

சில்லிட்டு வீசும் குளிர் தென்றல்; எங்கு திரும்பினும் பசுமை; நீர் நிறைந்த நீரோடை; அதிலிருந்து வரும் சலசலப்பு; மரங்களின் ஊடே கூவிடும் குயில்கள் — இந்த மாதிரியான ஏகாந்த சூழ்நிலையில், இயற்கையழகை அனுபவித்துக் கொண்டிருந்த புத்தனுக்கு, மனத்தில் ஏதோ பாரம் இருந்தது. நேபாள முடிமன்னன் புத்தன் மட்டும், துறவுக் கோலம் பூணுது, அரச போகத்திலே இருந்திருந்தால், நேபாளத்தின் சிறு கூருன குசிநாகரம் அவனை எப்படி எப்படியோ வரவேற்றிருக்கும். ஆனுல், இன்று அவன் துறவி. குசிநாகரத்தில் நாளைக் காலையில் நடக்கப் போகும் பலியிடலைத் தடுக்கத், தலைகொடுக்க வேண்டிய நிலையிலிருக்கிருன். அரசனுக இருந்திருந்தால், ஒரு உத்தரவுபோதும்; கப்பம் கட்டும்குசிநாகரமன்னன் அதற்குப் பணிந்துதானே ஆகவேண்டும் -இவ்வாறு பலவித எண்ணத்திலே உழன்ருன் புத்தன்.

தன் கொடுங்கதிர்களைப்பகல் முழுதும் அயராது வீசிய கதிரோன், அலுத்து சலித்து, கிழக்கே சாய்ந்தான். அந்த மஞ்சள் வெய்யிலுக்கும் காவி உடைக்கும், ஊருக்கு வெளிப்புறத்தேயிருந்த புத்தன் பூரண பொலிவுடன் விளங்கினுன். கண்களை மூடிப்பார்த்தான்; அவைகள் மறுத்தன. தியானத்தில் மூழ்க மறுத்த அவன் மனமோ, தன் இளமனைவி யசோதா, தன் ஆருயிர் மகன் ராகுலன் முதலியவர்களிடமெல்லாம் சென்று திரும்பியது. புத்தன் தன்னையும் தன் சூழ்நிலையையும் வெறுப்புடன் பார்த்துக்கொண்டான். இறுதியில் அவனது துறவொழுக்கம் அவன் கண்களை



மூடச்செய்தது. கதிரோனும் கண்ணைமூடப் போகிருன். எங்கும் அமைதி!

"ராஜரிஷி!"

"................"

"கௌதமா!"

"..........."

"வேளை கெட்ட வேளையில் தியான மெதற்கு சுவாமி? 'அபலை வந்திருக்கிருளே! அவலமும் அவளைத் தொடர்ந்து வந்திருக்கிறதே' என்று நினைத்துக் கருணைக் கண்களைச் சற்ருவது திறக்கக்கூடாதா?

புத்தன் ஊமையன் கனவு கண்டதுபோலத் திடீரென்று விழித்தான். கண்களைத் தேய்த்துவிட்டுப் பார்த்தான், எதிரே ஒரு எழில் மோகினி; ஆனுல், பூனைக்கு ருத்ராட்சம் கட்டியிருப்பதுபோல, கண்வெட்டி, நோக்கினவனை நோகவைக்கும் அவளோ, பூண்டிருப்பது தவவேடம். புத்தன் கண்ணைச் சிமிட்டிச் சிமிட்டிப் பார்த்தான். அவளும் பார்த்தாள். புத்தன் பார்வையில் குழப்பம் காணப்பட்டது. அவளது பார்வையில் ஆயிரமாயிரம் பொருள்கள்



வேலையாள்: என்னவோ தெரியலேங்க, ஊருக்குப் போகக்கொஞ்சம்கூட மனசே இல்லேங்க. எங்கள் ஊரை நினைச்சாலே ஒரே கசப்பா இருக்குதுங்க!

அவர்: ஏன் அப்படி? எந்த ஊரு உனக்கு?

வேலையாள்: வேப்பிலைப்பட்டிச் சத்திரமுங்க!

பொதிந்து கிடந்தன. அழகே உருவாகி வந்து அன்பு நோக்கோடு பார்த்திருந்தால் கூடப் புத்தனின் புத்தி பேதலித்திருக்காது. புத்தன்பேசத் தொடங்கினான்.

"அம்மா! தாங்கள்......"

"மாயா தேவியின் மைந்தா! இது என்ன கேலி! இருபது வயது பூர்த்தியாகாத கன்னிப் பெண்ணைப் பாட்டியென்று கூடக் கூப்பிடுவீர் போலிருக்கிறதே!"

"அம்மணி! துறவறம் என்பது பருவம் பாராது. துறவிக்குப் பெண்மையெல்லாம் தாய்மையே. தங்கள் பெயர்? இங்கு வந்த காரணம்......"

"என் பெயரா? கலா. அது போகட்டும் புத்தா! உன் மனைவி யசோதா இருக்கிறாளே அவள் உன் முன் வந்து நின்றால் இப்படித்தான் கடுகடுப்பாகபேசுவாயோ? அந்தக்குழைவெல்லாம் இப்போது எங்கே, கௌதமா? தவிக்கத் தவிக்கப் பிரிந்து வந்தாயே உன் மகன் ராகுலனை, அவனைக் கண்டால், எந்த அன்புடன் பேசுவாயோ, அந்த அன்பு வார்த்தைகளை என்னிடம் சொல்லக்கூடாதா?

"அம்மணி! உன் வார்த்தைகள் சோடிப்பாக இருந்தாலும் சூதானவையாக இருக்கின்றன. நானோ துறவி; நீங்களோ தவக்கோலம் தாங்கியிருக்கிறீர்கள்; உபதேசம்பெற வந்தவர்களைப் போல் தென்படுகிறது. நான் உங்களிடம் குழைந்து பேசுவதோ, அதை நீங்கள் எதிர்பார்ப்பதோ, இயற்கைக்கு விரோதம்"

"கௌதமா! அந்த இயற்கை தானே என்னை இப்படித் தூண்டுகிறது! அதற்கு நானென்ன செய்யட்டும்!"

"அம்மணி! தாங்கள் சொல்லுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லையே! தயவு செய்து இந்த அந்தி வேளையில் என்னைத் தனித்திருக்க விடுங்கள்."

"பாவம்! நீர்என்ன செய்வீர்! இன்பருசிகண்டு எத்தனை வருடங்களோ; கல்லும் முள்ளும் கானுந்தரமும் சுற்றி, யார் கண்ணிலும் படாமல் தப்பி, என் கண்ணில் பட்டிருக்கிறீர். முதலில் புரியாதுதான்! நான் புரியவைக்கிறேன் பாரும்! அரசகுமாரா! இதோ இடையைப் பாருங்கள்."

புத்தனின் உடல்முழுதும் ஏதோ ஒரு விதமான உணர்வு

பரவியது. புத்தனின் மனப்பிடிப்பு, சிறிது சிறிதாக மரத்துக்கு மரம் தாவ ஆரம்பித்தது.

"பார்த்தேன் கலா! அதில் இறையின் மாட்சியைத் தான் காணுகிறேன்"

"கௌதமா! கடவுட் கண் கொண்டு பாராதீர்; காதற் கண் கொண்டு பாருங்களேன்"

"அபச்சாரம்! அபச்சாரம்!! தகாத வார்த்தைகள் கலா! அழகு இயற்கையின் படைப்பு; அதைக் கண்டபடி ருசிக்க நாம் யார்?"

"சுகுமாரா! காலம் வீணே போகிறது. அதோ பாரும்! மந்தமாருதத்தில் தங்களையே மறந்து இசைக்கும் பறவை இனங்களைப் பாரும். அவை உம்மைப்போல இன்பம் ருசிக்க இயற்கையிடம் அனுமதிபெற வில்லை. இதோ பாருங்கள், என் விழிகளை! அவைகள் உமக்கு என்ன உபதேசிக்கின்றன, புத்தா எங்கே கூறும்?"

முற்றும் கேட்டபின் தான் புத்தன் காதைப் பொத்திக் கொண்டான். ஆனால் அவனது விழிகள் கலாவின் விழிகளைக் கவ்வின.

'அம்மணி' என்று கூப்பிட்ட புத்தனின்வாய், 'கலா'வென்று பெயர்சொல்லிக் கூப்பிட்டதுடன், 'பெண்ணே' என்று கூப்பிட்டும்விட்டது.

"பெண்ணே! உன் விழிகள் உருவமற்ற ஆண்டவனிருக்கும் இருட்டறைக்குத் துணை செய்யும் விளக்கு வெளிச்சம்; கனிவு நிறைந்த உன் விழிகள் என் போன்ற துறவிக்கு வழி காட்டுங் கோல்"

"குமாரா! என் துடிப்பை உணராது வேதாந்தம் பேசுகிறீர். இயற்கை எழுப்பிவிடும் என் ஆவலை நீர் பூர்த்திசெய்யாவிடில், நீர் வணங்கும் இயற்கையையே அவமதிப்பதாகும். இது தகுமா?"

இந்த இடத்தில் புத்தன் கட்டவிழ்ந்துவிட்டான். எங்கெங்கோ தேங்கிக் கிடந்த இளமைமுறுக்கு அவன் உடம்பின் ஓரிடத்தில் சேர்ந்தது அவனைக் கவர்ச்சிகரமாகப் பார்த்தாள் கலா. அவனது பாதத்தடியில் அமர்ந்தாள். புத்தனது பரந்த நெற்றியில் திலகமிடப் போனாள் கலா. புத்தன் போதை தெளிந்து, அதைத் தடுத்தான். கையொடு கை உராய்ந்தது. அவளது பரிச உணர்வு அவனது பாதம்வரை சென்று திரும்பியது. 'கலா!' என்று அன்பு முதிரக் கூப்பிட்டான் புத்தன். அவளும் ஏற்றசமயத்தை உணர்ந்தாள். அவனது இளமையில் எவ்வளவு தூரம் துடிப்பை உண்டாக்க முடியுமோ, அதற்குத் தன் உடம்பின் அங்கங்களைப் பயன்படுத்திக்கொண்டாள். வெற்றி நெருங்கிவந்துகொண்டிருந்தது. புத்தன் தன் இடத்தைவிட்டு எழுந்து கலாவை நெருங்கினான்; நெருங்கினான். கலா கையில் மையுடன் பொட்டிடும் பாவனையில் கையை மடித்துக்கொண்டே பின் வாங்கினாள். புத்தனே தொடர்கிறான். அதோ முடியப் போகிறது! எத்தனையோ ஆண்டுகளாகப்புலன் அடக்கம் செய்து மெய்யறிவு காண விருந்தபுத்தனின் துறவொழுக்கம் கண நேரத்தில் அழியப் போகிறது. ஆனால்...........!

கலாவின் கபடநாடகத்தையும் புத்தனின் இள்மைவேகத்தையும் இதுவரையில் பொறு



மையாகப் பார்த்துக்கொண்டிருந்த கானகத்து மரங்கள் கோபங்கொண்டனவோ என்னவோ? எங்கிருந்தோ திடீரென்று பெரும் இரைச்சலும் பெருங்காற்றும்; சூறைக் காற்று! எங்கும் புழுதிக்காடு.

மரத்திலிருந்த காய்ந்த சருகுகள் முற்றும் துறந்த துறவியைப்போல உதிர்ந்து கொட்டின. புத்தன் தூசி நிறைந்த நீர்மல்கிய கண்களால் விழித்துப் பார்த்தான். ஐயோ! என்ன கோரம்! முன் வந்த கலா இவள் தானா? அவனுக்கே சந்தேகம். தலை மயிர் முகத்தில் படர, ஆடை அலங்கோலமாகப் பரவிக் கிடக்க, வெளிறிய முகத்துடன், காமப் பார்வை பார்த்தாள் கலா. புத்தனுக்கு நாடி அயர்ந்துவிட்டது. அவளை வெகுண்டு பார்த்தான். அந்த அன்பு ஆசையெல்லாம் எங்கு போயிற்றோ? அவளை மேலும் கீழும் வேண்டா வெறுப்புடன் பார்த்தான்- மார்பகம் பார்த்தான். 'ஐயோ' என்று அலறினான் புத்தன்.

"அடி கள்ளி! பாதகி!! கன்னி என்று சொல்லி மாங்கல்யம் பூண்டிருக்கும் காமப் பிசாசே! என்முன் நில்லாதே. என்னைப் படுகுழியில் ஆழ்த்தவிருந்தாயே!" என்று அலறிக் கொண்டே, தன்னைக்காத்த காட்டைநோக்கி ஓடினான் புத்தன். மரத்தின் மறைவில் நின்று பார்த்துக்கொண்டிருந்த பட்டாச்சாரியையும் கையில் மைச்சிமிழியுடன் நின்றகலாவையும் ஏமாற்றிய அந்தப் பேய்க்காற்று, வந்து காட்டிலேயே புகுந்துவிட்டது.

பாரதிதாசன் பரம்பரை

புயல்

பார்க்கின்ற வீதி மாந்தர் பார்வையைப் புழுதிமண்ணால்
போர்க்கின்றாய்; உயர்மரங்கள் பொடிபட முறித்து வீழ்த்தி
ஆர்க்கின்றாய்; விட்டுக்கூரை அதிரச்செய் தவற்றைமண்ணில்
சேர்க்கின்ற புயலே உன்றன் சேட்டையை என்னசொல்வேன்!

திண்ணிட்ட மணல்மேட்டைநீ திருத்தியோர் குழியாய்ச்செய்வாய்
மண்ணிட்டோர் குழியை மேடாய் மாற்றினும் மாற்றுவாய்;நின்;
கண்பட்ட பொருள்களெல்லாம் காற்றிலே பறக்கச்செய்வாய்!
பண்பட்ட இயல்பதொன்றும் படைத்திலை போலும்நீதான்!

வன்கண்மை கொண்டுநீஇவ் வையத்தில் செய்யும் மாற்றம்
மின்கண்ணால் சினந்து நோக்கும் மேல்வானம் கருமுகில்கள்
உன்செய்கை கண்டு நொந்து உறுமும்;பின் கடலும் உன்னைத்
தன்கைகள் விரித்துநீட்டித் தகைவிலாய் "போபோ" என்னும்!

வல்லூறாய் அமைந்தாய்போலும் வையத்து அமைதிக்கேநீ!
கல்லாத கயவர் போலக் கருத்தின்றிச் செயல்கள்செய்வாய்;
எல்லோரும் உன்னைக் காய்வர்; ஏனோதான் உனக்கிப் புன்மை?
பொல்லாத செயல்மேற்கொண்டாய் புயலேநீ திருந்திவாழி!



தோழர் மா. குமாரசாமி விழுப்புரத்தைச் சேர்ந்தவர். தீய புயலையும், 'திருந்தி வாழி' என்று வாழ்த்தும் தமிழ்ப் பண்பை இப்பாடல் மூலம் அவரிடம் காண்கின்றோம். — ஆசிரியர்

கண்டேன் இலங்கையை!

ஏ. பி. சனுர்த்தனம்

இலங்கையின் உதகை! கோடையில் பல்லாயிரவர் பறந்து வருவர், இதன் குளிர்ச்சியை அடைய. மே மாதத்தில் இது சிறந்த விளையாட்டுப் பண்ணை! குதிரைப்பந்தயம் உண்டு. இங்குள்ள அக்கலா மலர்க்காடு நம் கண்ணுக்கினிய விருந்து. சீதை குளித்ததாகச் சொல்லப்படும் குளிரோடையையும், சிறைவைக்கப் பட்டதாக அளக்கப்படும் அசோகவனத்தையும் வைதீகர்கள் நமக்குக் காட்டுகின்றனர்.

இயற்கை அழகில் தலைசிறந்து விளங்குவது இலங்கை. சிறிய தீவாயினும் பலதிறப் பட்ட கோலக்காட்சிகளைக் கொண்டது. மலைவளம், நிலவளம், நீர்வளம், இவை மூன்றும் நம்மை மகிழ்விக்கப் போட்டியிடுகின்றன.

இலங்கையின் மையப்பகுதி தான் மலைப்பகுதி, தேயிலைத் தோட்டங்களும், இரப்பர்த் தோட்டங்களும் இங்கே அதிகம். வளைந்து வளைந்து கருநாகம் போல் செல்லும் தார் ரோடு, கிடந்த தொல்லைக் கிடையே போடப்பட்ட இருப்புப்பாதை, இவை இரண்டும் நம்மை 6000, 7000 அடி உயரமுள்ள நுவார எலியா பகுதிக்குக் கொண்டு செல்கின்றன. இது சிங்களத்தின் சிங்காரத் தோட்டம்! மேல்நாட்டாரின் மெக்கா!


தேயிலைத் தோட்டங்களின் நடுநாயகமாக விளங்குவது அட்டன். அட்டன் அழகிய சிறு நகரம். அட்டனிலிருந்து அதனினும் அழகிய பதுளைக்குச் செல்லும் பாதையில் பல சிறந்த காட்சிகளைக் காண்போம். பால் சாய்த்தது போன்ற வெண்மையான அழகிய நீர்வீழ்ச்சி தலவாக்கோல்லையருகில் காணப்படுகிறது. காரினின்றும் கீழே பார்த்தால் 2000, 3000 அடி ஆழம். பல

இடங்களில் அடர்ந்த புதர்களும், அவைகளைக் கடந்து செல்லும் அருவிகளும், தேயிலைத் தொழிற்சாலைகளும் காணப்படுகின்றன. மாலையில் மலைகளைத் தாவும்போது குளிர் காற்று நம்மை அறையும். மூடுபனி பாதையைமறைக்கும். பகலில் பலநிறப் பறவைகளும், பாய்பும், அணிலும், கிரியும் காணப்படுகின்றன. மேலும் கீழே இறங்க இறங்க மலைச்சாரலில் சாகுபடி நடப்பதைக் காணலாம்.

வரலாற்றில் சிறந்த இடம் பெற்றது கண்டி. பகைவர் பலராலும் அணுகமுடியாத அந்நகரைக், கடந்த நூற்ருண்டில், அதன் மன்னரை வேலூருக்கனுப்பிவிட்டு, ஆங்கிலேயர் பிடித்துக்கொண்டனர். மலைகள்சூழ, அருவிகள் அணைக்க இயற்கை எழில் மிகவுடையது கண்டி. கண்டிக்கருகிலுள்ள பரதீனியா தோட்டம் பார்புகழ் அடைந்தது. மிகப் பெரியது. உலகிலுள்ள அத்தனை மரஞ் செடிகளும் அந்தத்தோட்டத்தில் உண்டாம். உயர்ந்து வளர்ந்த பெரு மரங்களை அண்ணாந்துபார்த்தேன். கழுத்து வலித்தது. அழகிய முறையில் அமைத்து, சிறந்த பாதைகள்போட்டு மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் இத்தோட்டத்தை அமைத்துள்ளனர்.

சிங்களம் தீவாதலால் கடல் வளத்துக்குக் குறைவில்லை. தென்னந் தோட்டங்கள் கடற்கரைப் பகுதியில் உள்ளன. மீன் பிடிப்போர் வாழ்கின்றனர். கொழும்பிலிருந்து காலி செல்லும் இருப்புப் பாதை கடலோரத்தில் செல்கிறது. மாலைக் கதிரவன் மறையும் தங்கக் காட்சி, காலைப் பரிதியின் எழுச்சிக் கோலம், இவை இன்பம் தருவன. மட்டக்களப்புக்கருகில் பாடும் மீன்கள் உள்ளன! விந்தையல்லவா! ஆனால் உண்மை! நிலவு பொழியும் இரவினிலே ஓடத்திலேறிக் கரையோரமாகச் சென்றால் மீன்களின் பாட்டோசையைக் கேட்கலாம்; திரிகோணமலை சிறந்த கடல் தளம்.






இயற்கையாய் அமைந்தது. வெளியிலிருந்து பார்த்தால் துறைமுகம் தெரியாது. இரு சிறு குன்றுகளுக்கிடையே கப்பல்கள் நுழைகின்றன, இயற்கைத்தாய் கப்பல்களை ஒளித்து வைத்துக் கொண்டாளோ! மட்டக் களப்புக்கருகில் பாடும்மீன்கள் என்றால் திரிகோணமலைக்கருகில் வெந்நீர் ஊற்று! இதுவும் இயற்கையின் விந்தை. ஏழு கிணறுகள். ஒவ்வொன்றிலும் சூட்டின் அளவு வேறுபடுகிறது! இதில் குளித்தால் உடலுக்கு நல்லது.

இலங்கையில் பல அடர்ந்த காடுகள் உள்ளன. யானையும் சிறுத்தையும் இங்கு காணப்படும் பெரு விலங்குகள். கொசுத் தொல்லையால் மலேரியாக் காய்ச்சல் வருவதுண்டு. குரங்குக் கூட்டத்தின் கும்மாளத்திற்கும் குறைவில்லை.

இரண்டு பருவக் காற்றுகள் அடிப்பதால் மழைக்குக் குறைவில்லை. எங்கெங்குக் காணினும் பசுமை!

கடலோரத்தில் முத்தும், இரத்தினபுரிக்கருகில் சிறந்த கற்களும் கிடைக்கின்றன. இளநீரும், தேநீரும் இலங்கை தரும் இனிய பானங்கள். பாக்கு மரங்களுக்குப் பஞ்சமில்லை.

இலங்கையின் இயற்கை அழகை அள்ளி அள்ளிப் பருகினேன். ஆங்கிலேயர் பலர் ஆயிரமாயிரம் மைல்களைக் கடந்து இன்பமடைய இலங்கைக்கு வருகின்றனர். இத்தகைய அழகிய தீவைக் காணாத கண்ணென்ன கண்ணே!!! ○



பதினெட்டாம் அத்தியாயம்

வழி வளர்ந்தது!

மறுநாள் காலை சாவடியை விட்டு மூவரும் புறப்பட்டனர். சாவடித் தலைவன் ஒரு பை பணம் பெற்றுக்கொண்டு நன்றி செலுத்தினான்.

அவர்களின் பிரயாணம் வளர்ந்துகொண்டே இருந்தது. வழியும் பெருகிக் கொண்டிருந்தது. நாட்கணக்காகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். வழியெங்கும் மரங்களும், வாவிகளும் சோலைகளும், பூந்தோட்டங்களும் நிறைந்திருந்தன. அவைகளைப் பார்த்துக்கொண்டும் வேடிக்கையாகப் பேசிக்கொண்டும் சென்றனர். சோணிசந்த் தன் பெயர் சோணி என்று சொல்லி வைத்திருந்தான். அவர்கள் தௌலா, கான் என்று தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டிருந்தனர்.

இப்படிப் போய்க்கொண்டிருந்த பயணம் கடைசியாக முடியுங் கட்டத்தையடைந்தது. அதாவது டில்லி மாநகரின் அருகில் உள்ள மண்டபத்தில் தங்கினர். அந்த மண்டபத்தில் தங்கியிருந்தபொழுது பக்கிரியொருவன் வந்துசேர்ந்தான். அவன் 'ஜெ, ராம்சந்த்' என்றான். அவர்களுக்குச் சிரிப்பாக இருந்தது. முகமதிய மதத்தவன் இராம பஜனை செய்கிறானே என்று எண்ணினர். ஒருவேளை மிக நெருக்கத்தில் மதம் மாறிய பண்டாரமாக இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டனர். அவர்கள் அருகிலுள்ள சுனையில் நீராடப் போகிறோம் என்று கூறவே, சோணிசந்த் தனக்கு உடல்நிலை சரியில்லையென்று சொல்லித் தப்பித்துக்கொண்டான்.

வந்த பக்கிரி அதேவார்த்தைகளை உச்சரித்தான். சோணிசந்த் அதனையே திருப்பிக்கூறியவுடன் பக்கிரி அவனை நெருங்கினான்.

''நீர்தானே டில்லிக்கு எதிரிகளைத் தொடர்ந்து செல்வது?''

''ஆமாம்''

"தலைவர் கட்டளை - அவர்களை எத்தனை நாட்கள் அதிகமாகத் தவக்கப்படுத்த முடியுமோ அவ்வளவு நாட்கள் தவக்கப்படுத்தி டில்லியில் தங்கச் செய்ய வேண்டும்"

"ஜெ ராம்சந்த்"

மீண்டும் குதிரை ஏறினர்... "நீங்கள் டில்லியில் எங்கே தங்கப் போகிறீர்கள்?"

"இன்னும் தீர்மானிக்கவில்லை"

"வேண்டுமானால் எனது இருப்பிடத்தில்......"

"நீங்கள் எங்கிருப்பது?"

"நாட்டிய ராணி ரஜினியைத் தெரிந்திருக்கவேண்டுமே! அவளது மாளிகை என் சொந்தம்போல! வியாபாரமும் பார்த்துக் கொள்வேன். நாட்டியமும் கண்டு களிப்பேன். நீங்கள் விரும்பினால் என்னுடன் வாருங்கள். ரஜினியை அறிமுகப்படுத்துகிறேன். அவளைப் பார்த்துவிட்ட பிறகு நீங்கள் அவளை விட்டுப் பிரியவே மாட்டீர்கள். அவளது அழகை என்னால் வருணிக்க முடியாது நேரில் பார்க்க வேண்டும். அவள் அழகுப் பேழை!"

ஷாஜாவின் மனம் நெகிழ்ந்துவிட்டது. முடீன் அதனைக் குறிப்பால் உணர்ந்து கொண்டான். உடனே அவனே முந்திக்கொண்டு விடையளித்துவிட்டான்.

"நாங்கள் வந்த வேலை முக்கியமானது. அதை முடித்துக்கொண்டு உங்களைப்பார்க்கிறோம். இப்பொழுது உடன் வர முடியாமைக்கு வருந்துகிறோம்"

இதற்குள் கோட்டை மதிலை அடைந்துவிட்டனர். அப்பொழுது மாலை மணி ஐந்திருக்கும். அங்கிருந்த கோட்டைக் காவலரைக் கேட்டபோது அன்று வேட்டைநாள் என்று தெரிய வந்தது. ஆகவே சோணியிடமிருந்து விடைபெற்றுத் தௌலாவும் கானும் தவக்கமின்றித் தங்கள் பயணத்தைத் துவக்கினர். காற்றில் பறந்துதான் சென்றனர்போலும் — அவ்வளவு வேகம்! சோணிசந்த் சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டு நகருக்குள் நுழைந்தான்.

காட்டிற்குள் கூடாரங்கள் அடிக்கப்பட்டிருந்தன. அங்கு எவரும் இல்லை. ஆகவே காட்டினுள் மேலும் சென்றனர். கவலை தோய்ந்த முகத்தினராய்க் காவலாளிகள் வந்து கொண்டிருந்தனர்.

"பாதுஷா எங்கே?"

"அவர் சென்றவிடம் தெரியவில்லையே!"

பாதுஷா இன்னும் திரும்பவில்லையே என்ற பயமும், சோகமும் கப்பிக்கொண்டிருந்தன அவர்களது கண்களில்! அவர்கள் விழிகளால் தான் இந்த மொழிகளை உதிர்த்தனர். தட்டிவிட்டனர் அவர்களின் குதிரைகளை. அந்த இருண்டகாட்டில் எங்கெங்கோ அலைந்தனர்.

"ஐயோ, செத்தேன்"

அப்பொழுது ஒரு குரல் கேட்டது. யாரோ அம்மாதிரி கூவினார்கள். திடுக்கிட்டனர். திகைத்து நின்றனர்.

ஒரு வேளை அதுதான் பாதுஷாவின் குரலோ என்று எண்ணி ஏங்கினர். ஆனால் இருட்டு குறுக்கே நின்றது. வெறிபிடித்தவன் போலக்

குதித்தான் "ஸுராஜ். அல்லாவின் அருளோ, என்னவோ" என்று அவன் கருதும்படி அந்த நேரத்தில் தீவட்டி வெளிச்சங் கிடைத்தது. ஆம், அவன் அவனையுமறியாமல் "ஆபத்து, டில்லி பாதுஷாவுக்கு விபத்து" என்று கூவிவிட்டான்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

கடைசி ஜோதி!

மன்னன் வேட்டைக்கெனக் காட்டினுள் புகுந்தான். கலைக் கூட்டத்தைக் கலக்கினான். விடாது பின்தொடர்ந்தான். ஆனால் காலங் காத்துக் கிடக்குமா? கதிரவன் மேற்கை நாடினான். காரிருள் சூழ்ந்துகொண்டது. அரசனுக்கு அப்பொழுதுதான் அவன் நிலை விளங்கிற்று. பொழுது சாய்கிற வரையில் வேட்டையாடிக் கொண்டிருந்து விட்டோமே என்று எண்ணினான். பாதை தெரியவில்லை. ஆனால் படை முழக்கம் கேட்டது! ஒலி வருந் திசையை நோக்கினால் ஒரே இருட்டு, கும்மிருட்டு!

அருகிலிருந்த ஒரு மரத்தின் மீது ஏறினான். கண்ணுக்கு எட்டிய மட்டிலும் ஒன்றுமே தெரியவில்லை. வெகு தொலைவில் ஒரு சிறு வெளிச்சம், ஒரு ஜோதி, தென்பட்டது. பயத்தால் நிரம்பிக் கிடந்த அவன் மனத்தில் சிறு மகிழ்ச்சித் துளியும் சேர்ந்தது. அவசரமாக இறங்கினான். இறங்க முடியவில்லை. ஏதோ ஒன்று இறுக்குவது போன்றிருந்தது. கையால் தடவினான். வழுவழுவெனத் தெரிந்தது. அவ்வளவுதான்! "ஐயோ, செத்தேன்" என்று கூவினான். என்ன அது? மரத்தில் தொங்கிக் கொண்டிருந்த மலைப்பாம்பு! அது வரவர உடல் முழுவதையும் வளைத்துவிட்டது!

அப்பொழுது அவன் மனம்............?

ஆம, அன்று வேட்டைக்கு மன்னன் புறப்படும் நாள்! வேட்டைநாள் என்றால் ஆர்ப்பாட்டங்கள் இல்லாமல் இருக்குமா? பதினாயிரக்கணக்கான போர்வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர். நூற்றுக்கணக்கான யானைகள் பட்டாலும் ஜரிகையாலும் அலங்கரிக்கப்பட்டுப் படைக்கு முன்னணியில் சென்றன. ஒவ்வொரு கரியின்மீதும் இருவீரர் அமர்ந்திருந்தனர்; முதல் எட்டு யானைகளிலுள்ளவர்கள் முரசு கொட்டினர்; பிற யானைகளிலுள்ளவர்களில் ஒருவன் அங்குசத்தால் குத்தித் துரிதப்படுத்தினான்; மற்றவன் தங்க, வெள்ளி வேலைப்பாடுகளமைந்த பட்டுக் குஞ்சங்கள் தொங்கும் வளைந்த வாத்தியத்தை முழக்கினான். இவற்றிடையே அவன்—டார்ட்டாரி தேசத்துப் புரவியின் மீது கம்பீரமாக! அவனைச் சுற்றிலும் உயர்ந்த உடைகளால் உடலை மறைத்த உல்லாசச் சீமான்கள் நல்லவெண்மை நிறமுள்ள குதிரைகளில் வந்தார்கள். ஐந்நூறு ஒட்டகங்கள் பின்தொடர்ந்தன. அவைகளின்

முதுகுகளில் ஏராளமான சுமை ஏற்றப்பட்டிருந்தது.

இப்படியெல்லாம் அந்த நேரத்தில் நினைவு இழுத்துச் சென்றது அவனை! மேலும்.....

வேட்டைப்படை கிளம்பி விட்டது. மன்னன் மாளிகை வாயில்கள் திறக்கப்பட்டன. மாளிகைகள், மன்னர் சபா மண்டபங்கள், இசையரங்கங்கள் உள்ள வீதிகளை யெல்லாம் தாண்டி வந்து கொண்டிருந்தது. பல வீதிகள் வழியே நுழைந்து நுழைந்து வணிகர்கள் வாழும் கடைவீதியையும் தாண்டி விட்டது!

மாளிகைகளில் பேசும் 'சொர்ண மலைகள்' திரைசிறையில்! சாதாரண மக்கள் வழி நெடுகிலும் மண்டியிட்டுக் கரங்களைக் கண்களில் ஒத்தி, மார்பில் தொட்டு மண்ணில் வைத்து வணங்கினர். முரசொலியும், படை செல்லும் இரைச்சலும் நகரின் அமைதியைக் குலைத்தன. எங்கும் போர் முழக்கம்! நகரெங்கும் படைகள் நடந்து செல்வதால் புழுதி கிளம்பி நகரையே விழுங்கி விட்டது போன்றிருந்தது. கடைசியாகக் கோட்டை மதிலை அடைந்து விட்டது. கோட்டைக் கோபுரங்கள் தனது கதவுக் கரங்களை விரித்து வரவேற்றன, படை நுழைந்து சென்றது.

"இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் வந்து இதோ இறக்கப் போகிறேன்" என்று எண்ணினான், மன்னன். அவன் நினைவு அதற்கு மேலும் தொடர்ந்தது...............

இடம் காடு. வீரர்கள் வெகு வேகமாக மத்தாளங்களை முழக்கினர். வேட்டை நாய்கள் நாலா பக்கங்களிலும் சிதறி யோடின. காட்டு விலங்குகள் கதிகலங்கிப் போயின. சிங்கங்கள் கர்ஜித்தன. அந்தக்காடே எதிரொலித்தது! அதைக் கேட்ட பிற விலங்குகள் இங்கும் அங்கும் ஓடின—புலிகள் குகைகளை விட்டுக் கிளம்பின. மான்கள் மருண்டோடின. யானைகள் பிளிறின. பறவைகள் அவல ஒலி எழுப்பிப் பறந்தன.

யானை மீதிருந்தவர் வேங்கை மீது வேலைப் பாய்ச்சினர். யானைகளைத் துரத்தி யோடினர் சிலர். சிங்கங்கள் மீது குண்டைச் செலுத்த முயன்றனர் வேறு சிலர்.

வீரர்கள் வேட்டையிலிருந்த நாட்டத்தால் கூட்டங் கூட்டமாய்க் காட்டினுள் புகுந்து மிருகங்களை வேட்டையாடிக் கொன்று குவித்தனர். உணவு கொள்ளவும் மறந்தனர். அது மட்டுமா? பாதுஷா அவர்களுக்கு நடமாடுங் கடவுள் — அவனையே மறந்து விட்டனர். அடடா...... தனியாக ஏன் வந்தேன் என்று எண்ணமிட்டான். இனிச் சிந்திக்க முடியவில்லை......மூர்ச்சையானான்.

யார் இந்த மனிதன்? 'ஷா ஆலம்'

இரண்டாம் ஷா ஆலம் முடிசூடினான்!

பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த விளக்கின் ஒளி மங்கத் தொடங்கி விட்டது. அவியும் சுடர் சற்று அதிக ஒளியுடன்

எரியுமல்லவா? ஷா ஆலம், அணையும் விளக்கின் கடைசி ஜோதி, இறுதிச்சுடர்! ஆமாம், முகலாய் வம்சத்தின் கடைசி மூச்சு கி. பி. 1862 வரை ஊச லாடிக் கொண்டிருந்தது! அக்பர்ஷா, பகதூர்ஷா ஆகியோர் நடமாடும் பிணங்களாக உலவினார்கள். ஆனால்......... அவர்கள் அணைந்த பின்னரும் திரியில் எரியும் சிறு நெருப்பும், அதிலிருந்து ஒருவித நெடியுடன் கிளம்பும் புகையும் போன்றவர்களே. விளக்கிலிருந்த எண்ணெயும் வற்றி விட்டது. திரியின் இறுதிப் பிரியும் எரிந்து முடியுந் தறுவாயிலிருந்தது. முகலாய வம்சத்தின் கடைசி மன்னன் ஷாஆலம் அரியணை ஏறினான்.

இந்திய உபகண்டத்தின் இதயபீடம் டெல்லி......அங்குதான் ஷாஆலம் தனது ஆட்சியைத் துவக்கினான்.

கி. பி. 1525ல் பாபர் வெற்றிப் புன்னகை புரிந்தான். ஆனால் அது கி. பி. 1803ல் ஷாஆலத்தின் அழுகை ஓலமாக மாறி விட்டது. காந்த வனத்திலே, இரான் தம்பரிலே, கூர்ஜரத்திலே, வங்காளத்திலே, காபூலிலே, ஒரிஸாவிலே, மின்னலைப் போல ஒளிவிட்ட முகலாய வாள், வீரமிக்க போர்வாள், சமத்துவ சங்காதம் எழுப்பி இந்துக்களையும்முஸ்லீம்களையும் ஏக காலத்தில் தன் வசப் படுத்திய அக்பர் பாதுஷாவின் கொலை வாள், ஷாஆலத்தின்



காலத்தில் துருப்பிடித்துக் கிடந்தது, குருதியில் குளிப்பாட்டுவாரின்மையால்! ஔரங்கசீப்பின் அதட்டுங்குரல் இல்லை. அடிமைக்குரல் கேட்டது! பானிப்பட்டு புகழ் பாபர், ஓடி ஒளிந்து வாழ்ந்தாலும் பீடழியாப் பூபதி ஹுமாயூன், அகிலம் புகழும் அக்பர், அழியும் அழகுடைய 'தன் அன்புச்சிட்டுக்கு' அழியாச் சிற்பக்கூண்டாகத் தாஜ்மஹாலைக் கட்டிய ஷாஜஹான, ஆட்சிபீடத்தில் அமர்ந்தவர்களிலே ஒரு தனிரகம் ஔரங்கசீப்...... என்று காலக்கோல் கோலம் இழுத்துக் கொண்டே வந்து விட்டது.

சீக்கியரின் மத குருவான குருகோவிந்தசிங் இறந்தபிறகு ஏற்பட்ட பந்தாவெனும் போலிக்குருவுடன் போரிட்டு ஜம்மு மலைப்பிரதேசத்திற்கு விரட்டினான் பகதூர்ஷா......... 'அரசாக்குவோர்' பிடியில் சிக்கிய ஜஹாந்தர்ஷா........... வளர்த்த புகழ் குறையும் நேரத்தில் தங்கள் வாழ்வைத் துவக்கிய முகமது பரூக்ஸியர், இரமீஉத் தௌலா, தமீஉத் தார்ஜாத், முகமது ஷா, ஆமதுஷா, ஆலம்கிர்........... என்று சரித்திரம் தானே செலவுக்கணக்கில் எழுதிக் கொண்டது.

ஷாஆலம் தான் முகலாய வம்சத்தின் கடைசி ஜோதி!

அந்தக்கால நிலை............? உண்மையில் ஷாஆலம் மன்னர் பெயரளவில்; அவர் உரிமை, பெருமை உறிஞ்சப்பட்டு விட்டன! அவர் முடியணிந்திருந்தார், ஆனால் பிடியைப் பிறிதொரு இடத்தில் பறிகொடுத்து விட்டார்! கோல் உண்டு, கூனர்கள் கொண்டுள்ளது போலக் கையிலேந்த. ஆனால் அதன் பிடிப்பால் கண்டது கைவலி தான்! கொலு மண்டபம் போவதுண்டு, பரம்பரை வழக்கப்படி ஊராள அல்ல, உருளும் விழிகளால் உயிரையே வாங்கும் உள்ளம் உருக்கிகளின் நாட்டியம் பார்க்க! மதியூக மந்திரியும், பெரும் பெரும் பிரதானிகளும் இருந்தார்கள், ஏற்கனவே இருந்த முறைப்படி. இருந்தாலும் வேலைமாற்றமாகிவிட்டது. இப்பொழுது ஆள வழிகாட்ட அல்ல, அடங்கியிருக்க ஆகுந்திட்டங்களை அவ்வப்பொழுது அறிவித்து அபயமளிக்க! படையுண்டு பயனில்லை! — உண்மைக்கவி



ஒருவர்: அதோ போகிறாரே அவருக்கு உலகத்திலே தெரியாத இடமே இல்லைங்க!

மற்றவர்: அப்படியா? அவர் என்ன உலகம் பூராச் சுற்றினாருங்களா?

முதல்வர்: இல்லை ஐயா! அவர் தான் இந்த ஊர்ப் பூகோள வாத்தியார்.

பாடினால் இப்படித்தான் பாடியிருப்பான். வேறு வகையில் வருணிக்க வழியில்லை! அப்படி மூகலாய சக்கரவர்த்தியின் புகழ் பட்டுப்போயிற்று, கெட்டுக் கிடந்தது.

ஷா ஆலம் இப்பொழுது மெதுவாகக் கண்களைத் திறந்தான். ஆ, அவன் கண்ட காட்சி! ஆறுபேர் தீவட்டியுடன் நின்று கொண்டிருந்தனர், இரண்டு குதிரைகள் கம்பீரமாக நின்று கொண்டிருந்தன. ஒரு வீர வாலிபன் மெதுவாக வருடிக் கொண்டிருந்தான். அவன் நெற்றியை ......மற்றவன் கூர்மையாக அவனது முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஆ ஸுராஜ், நீ எங்கே வந்தாய்? வங்காளத்தில் ஏதாவது கலவரமா? எனக்குத் தக்க சமயத்தில் வந்து உயிர் கொடுத்தாயே. அல்லாதான் உன்னை அனுப்பியிருப்பார்! இந்த வாலிபன் யார்? இந்தத் தீவட்டிக் காரர்களை எங்கு கண்டாய்" என்று வேகமாகக் கேள்விக்குமேல் கேள்வி கேட்டான். "அதைப் பற்றி யெல்லாம்" பின்னால் பேசிக் கொள்ளலாம். முதலில் கிளம்புங்கள்.......... அணைய இருந்த முகலாய வம்சத்துக் கடைசி ஜோதியை அவியாது காத்தானே, அது போதும்" என்றான் அந்த வாலிபன். பணிந்து நின்ற தீவட்டித்தடியர்களைப் பார்த்து "உம், புறப்படுங்கள்" என்றான்.

தீவட்டி ஏந்தி முன்னே வேலையாட்கள் செல்ல மன்னனைத் தாங்கியபடி குதிரையைச் செலுத்தினான் ஸுராஜ். அவனைத் தொடர்ந்தான் அவன் நண்பன்.

(தொடரும்)



லப்பதிகாரக் காட்சிகள்

~ விசு திருநாவுக்கரசு ~

9. வைகைக் காட்சி!

மாதவி அனுப்பிய கடிதத்தையே தாய் தந்தையர்க்குக் கௌசிகன் மூலமாய் அனுப்பிய கோவலன், கண்ணகியும், கவுந்தியு மிருக்கும் இடம் நாடி வந்தான். அங்கு கொற்றவையின் வெற்றிச் சிறப்பை வியந்து பாடும் பாணருடன் அளவளாவினன். அவர் கையிலிருந்த செங்கோட்டி யாழை வாங்கினன். அரும்பாலைப்பண்ணை அற்புதமாய் மீட்டினன். பின்னர் பாணர்களை நோக்கி ''மதுரை இங்கிருந்து இன்னும் எவ்வளவு தூரத்திலுள்ளது?'' எனக் கேட்டான். அதற்குப் பாணர்கள்:

புலவர் செந்நாப்
பொருந்திய நிவப்பின்
பொதியில் தென்றல்
போலா(து) ஈங்கு
மதுரைத் தென்றல்
வந்தது காணீர்
நனிசேய்த்(து) அன்று
அவன் திருமலிமூதூர்

மதுரை சமீபத்தில்தானுள்ளது. அதைத் தெற்றெனக் காட்டி நகர்ந்துவரும் தென்றல்—மணமுண்டு பரப்பிவரும் தென்றல் இதோ வருகிறது. பொதிகைத்தென்றலிலும் புகழ் மிக்கது இம்மதுரைத் தென்றல் என்று கூறுகின்றனர். 'கூடற்காவதம் கூறுமின்' என்ற கோவலன் சொற்களிலே இன்னும் நெடுந்தூரத்தில் மதுரை உள்ளதோ என்ற சோர்விருப்பதை 'நனிசேய்த்து அன்று' —(மிகத்தூரத்தில் இல்லை) என்ற பாணர் மறுமொழி நீக்கி வைக்கிறது. அங்கிருந்து மூவருமாகப் புறப்பட்டு வைகையாற்றை வந்து அடைந்தனர். வைகைக் கரையிலேநின்று கவின்தருகுரவம், வகுளம், கோங்கு, வேங்கை, வெண்கடம்பு, சுரபுன்னை, மஞ்சாடி, மருதம், பவளமல்லிகை, செருந்தி, செண்பகம், பாடலம் என்ற மரங்கள் பூத்த மலர்கள் வைகைப் பெண்ணின் பூந்து

கிலாயின. குருக்கத்தி, செம் முல்லை, கொடி மல்லிகை படர்ந்து அப்பெண்ணரசியின் மேகலையாய்க் கவர்ந்து அழகு செய்தன. ஆற்றிடைக் குறையின் எதிர் எதிரே காணப்படும் மணற்குன்றுகள் அவளது மார்பகமாய்க்காட்சி நல்கின. அவள் முல்லை மலர்களால் சிரித்து, கயற் கண்களால் பார்த்து கருமணற் கூந்தலை ஒய்யாரமாய் நெளியவிட்டுப் பாண்டிய நாட்டின்குலக் கொடியாய்க் காட்சி தந்தாள்

அருவி முல்லை
அணிநகை யாட்டி
விலங்குநிமிர்ந் தொழுகிய
கருங்கயல் நெடுங்கண்
விரைமலர் நீங்கா
அவிர் அறல் கூந்தல்
உலகுபுரந் தூட்டும்
உயர்பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவிற்
பொருந்திய பூங்கொடி
வையை என்ற
பொய்யாக் குலக்கொடி

இத்தகைய வைகைப்பெண் கண்ணகிக்கு வரவிருக்கும் கரைகாணாத் துயருக்குக் கண்ணீர் வடிக்கிறாள். பூவாடையால் தன்னுடல் முழுவதையும் போர்த்தியவளாய் தன் கண்ணிலிருந்து வழியப்போகும் கண்ணீரை மறைத்துக் கொள்ளுகிறாள்.

தையற் குறுவது
தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர்
ஆடை போர்த்து
கண்ணிறை நெடுநீர்
கரந்தனள் அடக்கிப்
புனல்யாறு அன்றிது
பூம்புனல் யாறென
அனநடை மாதரும்
ஐயனும் தொழுது

தண்ணீர் மட்டும் ஓடிவரும் ஆறல்ல; தண்ணிய மலர்களையும் சுமந்துவரும் ஆறு என்று சொல்லிக் கண்ணகியும கோவலனும் கைகூப்பி வணங்கினர். மரத்தாலான புணையொன்றிலே மூவரும் ஏறி மதுரையை வலம் வந்து உள்ளே புகுந்தனர். அகழிகளிலும், தடாகங்களிலும் குவளையும், ஆம்பலும், தாமரையும் நெருங்கிக்கிடந்து காற்றால் ஆடின. இக்காட்சி கண்ணகி கோவலனுக்கு வரும் துன்பத்தை நினைத்து நடுங்குவது போலத் தோன்றியது. மலர் இருந்து தேன்பருகும் வண்டுகள் பாடின. அவை பரிந்து அழுவது போலப் பட்டன. மதில்களில் ஆங்காங்கே கொடிகள் பெருமிதமாய்க் காற்றில் ஆடின. அவை கண்ணகி, கோவலனை நோக்கி 'இங்கே உங்கட்குத் துன்பங்காத்திருக்கிறது. வாராதீர்கள்' எனமுன்னறிந்து கையசைத்துத் தடுப்பதுபோலக் காட்சி தந்தன.

அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி குடும்ப நிதி!


அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி அவர்களின் குடும்பத்திற்கு உதவும் பொருட்டுக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தம் சொந்தப் பொறுப்பில், 29–5–49 அன்று தஞ்சை அரண்மனை S. P. G. பள்ளி மைதானத்தில் கிந்தனார்காலட்சேபமும், காந்திமகான் கதை (வில்லுப் பாட்டு) யும் நடத்தினார். ஏராளமான மக்கள் அந்த உதவி நிதி நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர். அறிஞர் அண்ணாத்துரை தலைமையேற்றுச் சொற்பொழிவாற்றினார்.

கருநெடுங் குவளையும்
ஆம்பலும் கமலமும்
தையலும் கணவனும்
தனித்துறு துயரம்
ஐய மின்றி
அறிந்தவை போலப்
பன்னீர் வண்டு
பரிந்தினைந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு
காலுற நடுங்கப்
போருழந் தொடுத்த
ஆரெயில் நெடுங்கொடி
வாரலென் பனபோல்
மறித்துக் கைகாட்ட

மதுரை நெருங்க நெருங்கக் கோவலன் கொலைக்களம் நோக்கி வருவதாய் இளங்கோ உணருகிறார். மலர்சுமந்துவரும் வைகை கண்ணீர் மறைப்பதாய், மலர்க்கூட்டம் நடுங்குவதாய், வண்டினம் அழுவதாய் மெல்ல மெல்லக் குறிப்பாய்த் தம்உள்ளுணர்வை வெளியிட்ட ஆசிரியர் 'ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பனபோல் மறித்துக் கை காட்ட, என்ற வரிகளில் வெளிப்படையாகவே தம்முணர்வைவெளியிட்டு விடுகிறார். கண்ணீரை மறைத்தல், மலர்நடுங்கல், வண்டு அழுதல் இவைகளில் மிக நுட்பமாய்த் தம்முணர்வை வெளியிட்டு, இனி வெளிப்படையாய்ச் சொல்லாமல் முடியாது என்ற உணர்வால் உந்தப்பட்டுக் கை கொண்டு மறித்துக் காட்டும் நிலையைக் கொடியின் அசைவிலே ஆசிரியர் காணவைக்கிறார்.

பூம்புகாரை விட்டு நீங்க நீங்கக் கோவலனும் கண்ணகியும் இனி இன்பத்தை விட்டு நீங்குவதாகவே கருதுகிறார். அப்படியே மதுரையை நெருங்க நெருங்கத் துன்பத்தை நோக்கி வருவதாய் வாசகர்களை எண்ணவைத்து விடுகிறார்.

இத்தகைய உணர்வை எழுப்பிவரும் கண்ணகியும் கோவலனும் கவுந்தியும் மதுரையின் கீழ்த்திசை வாயிலுக்குச் சமீபத்திலுள்ள புறஞ்சேரியில் வந்து தங்கினர். இரவுப்பொழுதை அங்கே கழித்தனர். பொழுது புலர்ந்தது. புள்ளினங்கள் இன்னிசைபாடி ஆர்த்தன. பொய்கையிலேபூத்த தாமரைகள் இதழ் விரிந்து மலர்ந்தன.



கோவலன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வந்து கவுந்தி அடிகளை வணங்கினன். வழிநடைச் செலவில் இதுகாறும் கண்ணகிக்கும் தனக்கும் துணையாகி வந்த கவுந்தி அடிகளை விட்டுப் பிரியும் நேரம்நெருங்கி

வருவதை உணர்ந்தான். மதுரை நகருக்குள் போய்த் தக்க இடமறிந்து வரும்வரை கவுந்திபால் கண்ணகியை விட்டுச் சென்று வர எண்ணினான். அதை மிக நயமாய் வெளியிடுகிறான்.

"தவத்தீர் நல்லொழுக்க நெறியினின்றும் யான் பிறழ்ந்துவிட்ட காரணத்தால் கண்ணகி வருந்தவும், முன்பின் அறியாத நாடுவந்து துன்புறவுமான சிறுமையை அடைந்துவிட்டேன். பழமை வாய்ந்த இந்நகர் வணிகர்களுக்கு என் நிலைமைகூறி வரும்வரை தங்கள் திருவடி நிழலிலுள்ள கண்ணகிக்கு ஒரு தீங்கும் உண்டாகமாட்டாது" என்று கூறினான்.

நெறியின் நீங்கியோர்
நீர்மையே னாகி
நறுமலர் மேனி
நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயத்து
ஆரிடை உழந்து
சிறுமை யுற்றேன்
செய்தவத்தீர் யான்
தொன்னகர் மருங்கின்
மன்னர் பின்னோர்க்கு
என்னிலை உணர்த்தி
யான்வருங் காறும்
பாதக் காப்பினள்
பைந்தொடி யாகலின்
ஏதம் உண்டோ
அடிகள் ஈங்கு

கோவலன் இந்நிகழ்ச்சிகளிலெல்லாம் நெறியின் நீங்கிய தன் நிலைமையை நன்குணர்ந்திருக்கிறான். தான் செய்த பிழையால் தன் மனைவியும் வருந்த நேர்வது கண்டு துன்பமடைகிறான். கணிகையொடு களித்த வாழ்வால் இல்லறம் வழுவிய நிலைமையும், நல்ல குடிப்பிறந்தார் மனைவியோடு நாடுவிட்டு நீங்காமையையும் எண்ணி வருந்தி ஏங்குகிறான்.

திருமணம்

புதுக்கோட்டை செந்தமிழ்ப் பதிப்பகத்தில் பணியாற்றும் தோழர் ரெங்கசாமி — முனியம்மை திருமணம் 23—5—49 திங்கட் கிழமை பிற்பகலில் திரு அரு. பெரியண்ணன் அவர்கள் தலைமையில் சீர்திருத்த முறையில் நிகழ்ந்தது. மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் நா. முத்து, ராஜகோபால், முருகுசுப்பிரமணியன், டி. கே. சீனிவாசன் ஆகியோர் பேசினர். மணமக்களுக்குப் பாராட்டுரைகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

கேட்ட கவுந்தி அடிகள் "நீ சென்ற பிறப்பில் அறஞ் செய்தவன். அது காரணமாக அறிவும் செல்வமும் பெற்றாய். ஆனால் தீவினையும் செய்துள்ளாய். அதன் பயனால் உற்றார் உறவினரை விட்டுக் கானகத்தில் காதலியோடு வந்து வருந்தினாய், இத்துன்பமெல்லாம் இல்லறத்தில் வாழ்பவர்கட்கே உண்டாகிறது. துறவறம் மேற்கொண்ட ஞானிகளை இவையொன்றும் வந்து வருத்துவதில்லை. மதுரை சென்று இல்லறமிருந்து தொழிலறம் புரிதற்கு ஏற்ற இடமறிந்துவருக" என்று கூறினார்.

இந்திரனுடைய அணிகலப் பேழையைத் திறந்து வைத்தது போன்ற மதுரை நகரின் வனப்புவாய்ந்த அங்காடிகளையும் பிறவற்றையும் கண்டு

மீண்டு கண்ணகி, கவுந்தி இருக்குமிடம் நாடிக் கோவலன் வந்தான். அப்பொழுது மாடலன் என்ற அந்தணன் ஒருவன் அங்குவந்து தங்கினை. இவன் கோவலனை நன்கறிந்த நண்பன். கலைநலங்கள் நிரம்பியவன். குமரிக்கடலில் நீராடி வடக்கு நோக்கி வருபவன், வழியிடையில் அப்பூச்சோலையில் இளைப்பாற எண்ணினான். கண்ட கோவலன் வரவேற்று வணக்கங் கூறினான். எதிர் பாராத இடத்தில் கோவலனைக் காண நேர்ந்தமை பற்றி மாடலனுக்கு வியப்புண்டாயிற்று.

மாடலனது எண்ணத் திரையிலே கோவலனது சென்ற காலச்சிறப்பியல்புகள் படம் படமாய்க் காட்சி தந்தன. மாதவி பெற்றெடுத்த மகவுக்கு எப்பெயர் இடுவது என்று பிறர் கேட்டபோது கோவலன் இடுக்கண்வந்த காலத்துத் தன் முன்னோரைக் காத்த குல தெய்வமான மணிமேகலா தெய்வத்தின் பெயரை இடுக எனக்கூறியதும், பெயர்சூட்டப் பட்ட நாளில் கோவலன் வழங்கிய கொடைப் பொருள்களையும், அப்பொழுதுவந்த அந்தணன் ஒருவனை மதங்கொண்ட யானையின் வாயிலிருந்து மீட்ட அவன் கருணை உள்ளத்தையும், கீரியைக்கொன்ற பார்ப்பனிக்குத் தீவினை நீங்கப் பெரும் பொருள் தந்ததையும், நாகன் ஒருவன் உயிருக்குத் தன் நல்லுயிரைத்தர எண்ணிய மேலான இயல்பையும் பல வாறு சொல்லிப் பாராட்டுகிறான். மேலும், யான் அறிந்த வரையில் இம்மையில் நீ நல்லனவே செய்துளாய். கண்ணகியாரோடு நீ வருந்த நேர்ந்தது முற்பிறப்பில் செய்த தீவினைப் பயன்போலும் என்று கூறிக் கோவலன் நிலைமைக்கு இரக்கப்பட்டான்.

இப்பகுதிகளில் ஆசிரியர் இளங்கோ அடிகள் கோவலனது பலமேலான பண்புகளை மாடலன் மூலமாய்ப் பேசவைக்கிறார். தொடக்கத்தில் அவனது பருவம், அழகு, தந்தையின் பெரும்புகழ் இவைகளை மிகச்சில சொற்களால் கூறிய ஆசிரியர், கவுந்தி, கௌசிகன் மூலமாய் அவனது நல்லியல் புகளை மிகச்சுருக்கமாய்க்கூறி அவன் கலைவல்லவன் என்பதை மாதவியோடு வாழ்ந்த வாழ்விலும், பிறகு, கொற்றவை கோயிலில் பாணர் முன்னிலையில் அளவளாவிய நிலையிலும் திறம்படக் காட்டியதை அறிந்தோம். இந்த அளவில் ஒருகாவியத் தலைவனுக்கான சால்புகள் நிரம்பியவனைக் கோவலனை நாம் எண்ணிவிட முடியாது; இதைத் தவிர்க்கின்ற முறையிலே தான் மாடலன் பேசினான். அவன் பேச்சிலே காவியத் தலைவனுக்கான, நிரம்பிய கருணையும், வீரமும், கொடையும், தன்னலமின்மையும் தக்க காரணத்தோடு பாராட்டப் பட்டுள்ளன இவ்வாறு ஏற்ற இடமறிந்து அமைக்கப்பட்டது மேதைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

மாடலன் பேசிய பின்னர் கோவலன் தான் கண்ட தீய கனவு பற்றிக்கூறுகிறான். அக்கனவேசிலப்பதிகாரக்கதையின் மெய்யான முடிவாகிவிடுகிறது.

மதுரை நகரில் தங்குவதற்கு முன் கண்ணகியை எங்கு இருக்கச்செய்வது எனக் கோவலன் எண்ணியபோது ஆயர் குலத்து முதிர்ந்த மாதரி என்பாள் அங்கு வந்தாள். ○

மாணவர் மன்றம்

கேள்வி 7 விடைகள்

தி. திருவரங்கன்
6—ம் படிவம்
ம. தி. தா. இ. க உயர்நிலைப் பள்ளி
திருநெல்வேலி
(பரிசு பெற்றவர்)

ஒரு மாணவன் பள்ளியை விட்டு வெளியேறுவதற்குள் குறைந்தது ஆறு நூறு குறட்பாக்களாவது மனப்பாடமாயிருக்கும்படி பாடத் திட்டம் அமைய வேண்டும். தனியாகக் குறள்வகுப்பும் குறளாசிரியரும் நியமிக்கப்படவேண்டும். திருக்குறள் — பேச்சுப் போட்டி, எழுத்துப்போட்டி, இசைப்போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்குத் தனிச்சலுகைகள் காட்ட வேண்டும். 2-ம் படிவத்திலிருந்தே பொருட்பால், அறத்துப்பால், என பொருட்பாலை முதலில் வைத்து வரிசைக்கிரமமாகப் பாக்களைப் பயிற்றுவிக்க வேண்டும். பள்ளியிறுதி வகுப்பில் குறள் தேர்வு நடைபெறவேண்டும். தமிழகத்தில் திருவள்ளுவர் ஆண்டு சட்டமாக்கப்பட வேண்டும். தமிழர்களுடைய மதம் — நெறி வள்ளுவர்சமயம் என்று சொல்ல வேண்டும். மார்க்ஸிஸம், காந்தியம் போல் 'வள்ளுவம்' என்று வள்ளுவரது கொள்கைகளுக்குப் பெயரிடவேண்டும். வானொலியில் நாள் தோறும் குறள் பயிற்சியும் விளக்க உரைகளும் இடம் பெறவேண்டும். திரைப்படங்களில் — எடுத்துக் காட்டாக 'வேலைக்காரியில்', மானத்துக்காக உயிர்விடும் சுந்தரம் பிள்ளைக்கு "மயிர் நீப்பின்......... மானம் வரின்" எனும் குறளை நினைவுபடுத்தும் வாயிலாக மக்களுக்கு உணர்த்தலாம், திரைப் படங்கள் மூலம் சீக்கிரம் பரவும். குறளின் கருத்துக்களாக அமைந்த கதைகள், நாடகங்கள் தேவை. வ. உ., சி. போன்ற அறிஞர்களின் புது உரைகள் தேவை. பட்டி தொட்டிகளிலும், மூலை முடுக்குகளிலும் "வள்ளுவர் கழகம்" தோன்றுமளவுக்கு அறிஞர்களின் சொற்பொழிவுகள் தேவை. முக்கியமாக அரசாங்கம் பொறுப்பெடுத்துக் குறளைப்பரப்ப வரவு செலவுத் திட்டத்தில் ஒருபகுதியை ஒதுக்க வேண்டும். நாட்டில் வள்ளுவம் வளரும்.

●

R. முருகையன்
5—ம் படிவம்
பின்லே உயர்நிலைப் பள்ளி
மன்னார்குடி

இதுகாறும் திருக்குறள் ஒரு மத நூலாகவும் இலக்கிய இன்பநூலாகவும் புலவர் படிக்கும் நூலாகவும் கருதப்பட்டு வந்தது. இனிமேல் திருக்குறளை ஒரு வாழ்க்கைக் கலை நூலாகக்கருதி அறிவாக்கத்திற்குப் பயில வேண்டும். குறளைப் பரப்பப் புலவர் பெருமக்கள் முன் வரவேண்டும். கடின உரையைக்

களைந்துவிட்டு எளிய உரை செவ்விய முறையில் எழுதவேண்டும். ஊர்தோறும் திருக்குறள் கழகங்கள் துவக்குவித்துக் குறள் சொற்பொழிவுகள் நிகழ்த்த வேண்டும். மாநாடுகள் கூட்டுவித்துக் குறள் அவசியத்தைப்பற்றி வற்புறுத்தலாம். பள்ளியில் வாரம் ஒரு குறள் வகுப்பு நடத்தலாம். படிப்பறியாப் பாமரனும் அறிந்து கொள்ள வானொலி வாயிலாகத் தினமும் ஒவ்வொரு குறளுக்கும் விளக்கம் கரலாம். எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் இதனைக்கையாள வேண்டும். அறிஞர்களும் அரசாங்கமும் முன்வந்தால் எதையும் செய்யலாம்.

●

வெ. அருச்சுனன்
5—ம் படிவம்
ச. உ. பள்ளி கோணுபட்டு

தமிழ்நாட்டுப் பள்ளிகளிலே திருக்குறளை 5வது வகுப்பில் இருந்தே கட்டாயப்பாடமாக வைக்க வேண்டும். பற்பல பத்திரிகைகளிலும் "வள்ளுவர் காட்டும் வழி" "குறளின் பெருமை" என்ற தலைப்பிலே பல குறள்களை எழுதி வெளியிடவேண்டும். வானொலி நிலையத்தில் வாரமொருமுறை "குறள் விளக்கம்" என்பது பற்றிக் கூறுதல் வேண்டும். பேசும்படம் மூலம் பெரிதும் குறளைப்பரப்பலாம். பல சொற்பொழிவுகளிலும் குறளை எடுத்தோதுதல் வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் "வள்ளுவர் கழகம்" என்று ஏற்படுத்தி, அவ்வூர் மக்களுக்குக் குறளைப்பற்றி அக்கழகத்தார் எடுத்துச் சொல்லி மனனம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். பற்பல நிலையங்களிலும் குறளை எழுதித் துலங்கச் செய்ய வேண்டும். மாற்றார்க்குக் குறளை எடுத்து இயம்பவேண்டும். அதிகமான குறளை மனப்பாடம் செய்வோர்க்கும், அறிவுடன், ஆராய்ச்சியுடன் பொருள் உரைப்பாருக்கும், "குறள்பரிசு" என்ற பரிசு ஆண்டுக் கொருதடவை அளிக்க வேண்டும். பல இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து பல ஊர்களுக்குச் சென்று திருக்குறள் விளக்கம் செய்து அன்னவரைப் படிக்கச் செய்யவேண்டும். இக்கழகத்தார் "குறள் நிதி" ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலம் வரும் பணத்தினால் 100 அல்லது 200 குறள்கட்கு எளிய நடையில் உரைஎழுதி மக்கட்கு வறிதே வழங்குதல் வேண்டும்.

------------------------------ இங்கே கத்தரிக்க ------------------------------

கேள்வி எண். 8	பெயர்..............................
மாணவர்கள் ஊர்ச் செலவு செல்லுவதால் ஏற்படும் பயனென்ன?	வகுப்பு.................வயது.........
—அங்கயற் கண்ணன்	பள்ளி..............................
6—ம் படிவம்	ஊர்..............................
அ. ரெ. உ. பள்ளி மதுரை	
முடிவு நாள் 18—6—49	தேதி.................கையெழுத்து